தமிழ் முரசு

5

ஆசிரியர்:

ம.பொ.சிவஞான



K. R. ராமசாமியின்

கிருஷ்ணன் நாடக சபா

தஞ்சையில் 12-2-47 முதல் தினசரி நடைபெறுகிறது.

ஆயிரக் கணக்கான மக்கள் அனுதினம் கண்டு களிக்கும்

அறிய கருத்துக்கள் நிறைந்த கற்பனை சித்திரம்.

"வேலைக்காரி"

நாடகம்

(அறிஞர் C. N. அண்ணாத்துரை M.A., எழுதியது)

பாடல்கள் :
உடுமலை நாராயணக் கவி.

நாடக அமைப்பு :
M. S. முத்துகிருஷ்ணன்.

சபை அமைப்பு :
T. P. பொன்னுசாமி.

நிர்வாகி :
P. V. எத்திராஜ்.

உரிமையாளர் :

K. R. ராமசாமி

தமிழ் முரசு

தொகுதி : ௧ | விய - மாசி - ௧௭ 1-3-1947 | பகுதி : ௫

பொருளடக்கம்

ஆட்சியின் அறிவிப்பு	தலையங்கம்	... ௨
பதவி பறிபோயிற்று !		.... ௯
செய்தித் திரட்டு		.... ௧௧
மறைந்த வரலாறு	பாமரன்"	... ௧௫
நாகரிகம் – பணமா ?	'மோசி'	... ௧௭
கட்டுப்பாடு......	அ. ச. ஞானசம்பந்தம்	... ௨௦
களையும் பயிரும்	அ. முத்துசிவன்	... ௨௫
சார மொழிகள்		... ௩௩
திருந்தியது யார் ?	ஆர். சீனிவாசன்	... ௩௫
கடன்காரன் கனவு	போ. குருசாமி	... ௪௧
இட மதிப்பு	"சேனாவரையன்"	... ௪௫
மதிப்புரை		... ௪௭

அட்டைப் படம் : திரு. கிருஷ்ணன், கும்பகோணம்.

கதைகளில் வருவன கற்பனைப் பெயர்களே.

விலை 4 அணா

தமிழ் முரசு

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

ஆட்லியின் அறிவிப்பு

இன்னும் பதினாறே மாதங்களில் இந்தியாவின் அதிகாரத்தைப் பொறுப்புள்ள இந்தியர்களிடம் மாற்றிவிடப் போவதாகப் பிரிட்டிஷ் பிரதமர் ஆட்லி அறிக்கை வெளியிட்டு விட்டார். இருநூறு வருடங்களாக் ஆண்ட அதிகார வர்க்கம்தான்—வளமிக்க இந்தியாவை வறுமையில் வீழ்த்திய வர்த்தகக் கூட்டம்தான் இந்த முடிவுக்கு வந்த தென்றால் நமக்கு வியப்பாக இருக்கலாம். இது பொய்யோ என்றுகூட ஐயம் கொள்ளலாம். திடீரென்று அவர்கள் இந்த முடிவுக்கு வரக் காரணம் என்ன? இந்திய மக்கள்மீது கொண்ட கருணையாலா? அல்லது மன்னர் சர்க்காரின் மன மாற்றத்தாலா? அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. மனம் என்ற ஒன்றே இல்லாதவரிடம் மாறுதல் தோன்றுவது எங்ஙனம்! பின் அவர்கள் அதிகாரத்தைக் கைவிட வேண்டிய அவசியமென்ன? அதை இந்தியா மந்திரியே சொல்லக் கேளுங்கள் :

"எல்லா விஷயங்களையும் பரிசீலித்தால்கூட 1948-ம் வருஷத்திற்குப் பின் இப்போழுது உள்ள அடிப்படையில் பிரிட்டிஷ் ஆட்சி போதுமான திறமையுடன் நடைபெற முடியாதென்றே இந்தியாவில் உள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து நமக்கு வந்துள்ள யோசனைகள் கூறுகின்றன."

லார்டுகள் சபையில் பெதிக் லாரன்ஸ் கூறியது இது.

ஆம், இன்று இந்தியாவில் எங்கு நோக்கினாலும் போராட்டம். ஒரு மாகாணத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட இன்னொரு மாகாணம் சுயநிர்ணயம் வேண்டிக் கிளர்ச்சி செய்கிறது. ஒரு மதத்தினரின் செல்வாக்கிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக வாழ இன்னொரு மதத்தினர் கலகம் செய்கின்றனர். ஒரு வர்க்கத்தினரின் சுரண்டலில் இருந்து விடுபட்டுச் சுக வாழ்வு எய்த, இன்னொரு வர்க்கம் புரட்சி செய்கிறது. இதன் விளைவாகச் சட்ட மறுப்பு, சிறைத் தண்டனை, கொலை, கொள்ளை, தீ வைத்தல் முதலிய பயங்கர நிகழ்ச்சிகள் இந்தியாவில் அன்றாடக் காட்சிகளாய் விட்டன. இதைத் தடுத்து அமைதியைக் காப்பது இனிமேல் தங்களாலும் முடியாதென்பதைப் பிரிட்டிஷ் சர்க்கார் உணர்ந்துகொண்டு விட்டார்கள். காரணம் இந்தப் போராட்டங்கள் எல்லாவற்றுக்கும் சுதந்திரம் ஒன்றே லட்சியமா யிருப்பதே யாகும். ஆகவேதான் பிரதமர் ஆட்லி அதிகாரத்தை மாற்றுவதற்கு நாள் குறிக்க வேண்டியதாயிற்று.

பிரித்தாளும் தந்திரம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிறவிக் குணமாகும். தாங்கள் ஆளுகின்ற வரையில் மக்களைப் பிரித்து வைப்பார்கள். இனி

ஆள முடியாது என்ற நிலை ஏற்படும்போது மக்கள் பிரிவினைக் கேற்றவாறு நாட்டையும் பிரிப்பார்கள். இந்த நாச வேலையை அன்று அயர்லாந்தில் செய்தார்கள். அதையே இன்றும் இந்தியாவில் செய்யப் போவதாக ஆட்லி துரைமகனார் அறிவித்துவிட்டார். எனவே, பிரிட்டிஷார் அதிகாரத்தை ஒப்படைக்கும் நாளில் இந்தியாவின் பூகோளப் படத்தில் ஒரு பெரிய மாறுதல் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. இன்னும் பதினாறு மாதங்களுக்குள் காங்கிரஸ், முஸ்லீம் லீக் இவ்விரண்டுக்கும் சமரசம் ஏற்படவில்லையானால் பிரிட்டிஷ் இந்தியாவானது பாகிஸ்தான், இந்துஸ்தான் என்று இரண்டாகப் பிளவுபடுவது திண்ணம். அந்தப் பாகிஸ்தான் ஜனாப் ஜின்னா விரும்புவது போன்று அஸ்ஸாம் மாகாணம் அடங்கியதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் பாகிஸ்தான் ஏற்படுவது என்னமோ திண்ணம்.

பிரிட்டிஷார் பாகிஸ்தானுக்குப் பரிவு காட்டுவதெல்லாம் ஆங்கிலஸ்தானுக்கு ஆதரவு தேடுவதற்கேயாகும். 'பிரித்துவிட்டு வெளியேறுவது' அல்ல பிரிட்டிஷாரின் நோக்கம். பிரித்து விட்டு இருந்து வாழ்வதேயாகும். காங்கிரஸ்—முஸ்லீம் லீக் ஒற்றுமை ஏற்படாத நிலையில் பிரிட்டிஷார் தங்கள் இஷ்டப்படி இந்தியாவைப் பிரித்துப் பல்வேறு கட்சியினரிடம் அதிகாரத்தை ஒப்படைப்பார்களானால் வருங்கால இந்தியா எவ்விதம் காட்சி யளிக்கும் என்பதை நினைக்கவே பயமாக இருக்கின்றது.

இந்து இந்தியா, முஸ்லீம் இந்தியா, சமஸ்தான இந்தியா என்று மூன்றுவிதமாக இந்தியா வருங்

காலத்தில் காட்சி யளிக்கும். மக்களின் இஷ்டத்துக்கு விரோதமாக எதேச்சாதிகாரம் புரியும் சமஸ்தான மன்னர்கள், பொறுப்பாட்சிக் கிளர்ச்சியை நசுக்குவதற்காகப் பிரிட்டிஷ் துருப்புக்களின் தயவில் வாழ வேண்டியிருக்கும்.

அதேபோல், பிரிட்டிஷாரின் தயவால் பாகிஸ்தானைப் பெற்ற முஸ்லீம் இந்தியா, மிகப் பெரிய நிலப் பரப்பும் மிகுதியான மக்கள் தொகையும், செல்வ வளமும் படைத்த ஹிந்து இந்தியாவின் பகையில்லாமல் இருக்கமுடியாது. மேலும் பாகிஸ்தானுக்குட்பட்ட சக்திவாய்ந்த சிறுபான்மையினரான இந்து, சீக்கியரின் பலம் வாய்ந்த எதிர்ப்பை எந்த நேரமும் சமாளித்தாகவேண்டும். எனவே, பாகிஸ்தான் எனப்படும் முஸ்லீம் இந்தியா பிரிட்டிஷ் துருப்புக்களின் தயவின்றி உள்நாட்டு அமைதியைக் காப்பதென்பது ஒருபோதும் இயலாத காரியம். ஆகவே, சமஸ்தான இந்தியா, முஸ்லீம்-இந்தியா ஆகியவைகளுக்குள்ள இந்தச் சங்கடத்தைச் சாதகமாகக்கொண்டு அவைகளுடன் ராணுவ ஒப்பந்தம் செய்துகொள்வதும், இந்த இரு பகுதிகளையும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இணைந்திருக்கச் செய்வதும் சாத்தியமே யாகும்.

இந்த நிலையில், நாம் எதிர்பார்ப்பதுபோல் இந்து இந்தியாவானது பிரிட்டனுடன் எவ்விதத் தொடர்பும் கொள்ளாது, பூரண சுதந்திர நாடாக விளங்கினாலுங்கூட அதனாலேயே ஒரு சுதந்திர நாட்டுக்குரிய அமைதியும் சுகமும் அதற்கு இருக்கமுடியாது. பாகிஸ்தான், இந்துஸ்தான் ஆகியவற்றுக்

இடையே அடிக்கடி எழும் எல்லைத் தகராறுகள், பாகிஸ்தான் பிரதேசத்தில் வாழும் சிறுபான்மை இந்துக்களின் அபயக் குரல் ஆகியவற்றால் தொல்லைப் பட நேரும்.

ஆகவே, முஸ்லீம் இந்தியா, இந்து இந்தியா, சமஸ்தான இந்தியா ஆகிய எந்தப் பகுதியும் பெயரளவில் சுதந்திர நாடாக இருந்தாலும் கூட, பிரிட்டிஷாரின் மேல் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவது இயலாத காரியம்.

இந்த அபாயத்திலிருந்து இந்தியாவை விடுவிக்க வேண்டியது இந்திய அரசியல் கட்சிகளின்—முக்கியமாகக் காங்கிரஸின் தலையாய கடமை. வட இந்தியாவைப் பொறுத்த வரை நிலைமை இதுதான். முஸ்லீம்களின் கோரிக்கையைக் காங்கிரஸ் அங்கீகரிப்பதின் மூலம் இந்துக்களுடன் பகையற்ற ஒரு பாகிஸ்தான் ஆட்சி ஏற்பட முடியும். இதனால் மூன்று நல்ல விளைவுகள் ஏற்படலாம்.

(1) பாகிஸ்தான் ஆட்சியிலுள்ள இந்து, சீக்கிய மைனாரிட்டியினர் பயமின்றி வாழ முடியும்.

(2) இந்து இந்தியாவுக்கும், முஸ்லிம் இந்தியாவுக்கும் ராணுவம், வெளிநாட்டு உறவு, போக்குவரவு ஆகிய விஷயங்களில் ஒரு பொதுவான உடன்படிக்கை செய்துகொள்ள முடியும்.

(3) பாகிஸ்தான் பகுதியில் பிரிட்டிஷ் ராணுவ ஆதிக்கமும், வர்த்தகச் சுரண்டலும் இல்லாதபடி-

செய்துவிடலாம். இதனுல் இந்து இந்தியாவும் அமைதியுடன் வாழ முடியும்.

ஆனுல், மேற் சொன்ன காரியங்கள் நிறைவேறுவது காங்கிரஸைமட்டும் அல்லாமல் முஸ்லீம் லீக்கின் மனப்பான்மையையும் பொறுத்திருக்கிறது. ஜனுப் ஜின்ஞ முஸ்லீம் அல்லாத மக்களின் நல்லெண்ணத்துடன் பாகிஸ்தானைப் பெற விரும்புகிருரா? அல்லது பிரிட்டிஷாரின் தயவில் பாகிஸ்தானைப் பெற விரும்புகிருரா? என்ற இரண்டில் ஒன்று தெரியவேண்டும்.

முஸ்லீம் அல்லாத கோடானுகோடி இந்தியர்களின் பகைமையுடன் பிரிட்டிஷார் தயவின்கீழ்ப் பாகிஸ்தான் ஆட்சியை அமைக்க விரும்புவாரானுல் அதைப் பிரிட்டிஷாரின் பீரங்கியாலேயே காப்பாற்ற வேண்டுமென்பதை அவர் அறிந்தே இருக்க வேண்டும்.

இந்து இந்தியா என்று சொல்லப்படும் சென்னை, மத்திய மாகாணம், ஒரிஸ்ஸா, பம்பாய், ஐக்கிய மாகாணம், பீகார், அஸ்ஸாம் ஆகிய ஏழு மாகாணங்களைப் பொறுத்த வரையில் மொழிவாரி மாகாணங்களைத் திருத்தி அமைத்து ஒவ்வொரு மொழி பேசும் மாகாணத்துக்கும் சுய அரசை நிறுவிக்கொள்ளும் சுயநிர்ணய உரிமை உண்டு என்று அறிவிக்க வேண்டும். அந்தச் சுதந்திர மாகாணங்கள் தங்கள் நன்மைக்காகவும் இந்தியாவின் பொது நன்மைக்காகவும் சுதந்திர மாகாணங்களின் ஐக்கியச் சமஷ்டி ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு முஸ்லீம் மாகாணங்களை லீக் தலைமையிலும் முஸ்லீம் அல்லாதார் மாகாணங்களைக் காங்கிரஸ் தலைமையிலும் ஒன்றுபடுத்தும் வேலையைக் காங்கிரஸ், லீக் சமரசத்தின் பேரில் உடனடியாகத் துவக்க வேண்டும். பதினாறு மாதங்களுக்குப் பிறகு பிரிட்டிஷார் தனித்தனிக் கட்சிகளிடம் ஒப்பந்தம் பேசுவதைத் தவிர்த்து இந்தியாவின் மிகப் பெரிய கட்சிகளான காங்கிரஸ், லீக் ஆகிய இரண்டும் ஒன்று கலந்து அமைக்கும் ஒரு ஸ்தாபனத்திடம் பிரிட்டிஷார் அதிகாரத்தை ஒப்படைத்து வெளியேறும் நிலைமையை உண்டாக்க வேண்டும். சமய அடிப்படையில் இந்தியாவின் அரசியலை வகுப்பதென்பது சாதாரண நிலையில் ஏற்கக் கூடியதல்ல என்றாலும், ஆட்லியின் அறிக்கைக்குப் பிறகு அதை ஒரு ராஜதந்திர நடவடிக்கையாக மேற்கொள்ள வேண்டியதாகி விட்டது. இல்லையேல், ஆட்லியின் அறிக்கை ஒரு பயங்கரமான உள்நாட்டுக் கலகத்தை இந்தியாவில் ஏற்படுத்தி விடுமென்பதில் ஐயமில்லை.

பதவி பறிபோயிற்று!

ஆந்திர கேசரி பிரகாசத்தின் பிரதமர் பதவி பறிபோயிற்று. நம்பியிருந்த மந்திரிகள் ஐவர் நட்டாற்றில் விட்டனர். அன்பு காட்டிய ஆந்திர மந்திரிகள் அமைதியாக வெளியேறினர். தலை வணங்காத தலைமை மந்திரியான பிரகாசம் அவர்கள் தம் எதிரிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறும் கோரக் காட்சியைப் பார்க்கவேண்டியதாயிற்று. பரிதாப நிலைதான். ஆனால், தவறுக்கு ஏற்ற தண்டனை. நாட்டுப் பணியில் செல்வத்தை யெல்லாம் இழந்த அவர் இன்று மக்களிடையே தமக்கு இருந்த செல்வாக்கையும் இழந்தார். இந்தப் பரிதாப நிலைக்குக் காரணம் அவரது பதவி மோகமே யாகும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறிய இந்த நிலையிலும்கூட இன்னும் முப்பது நாள் அவர் பதவியை விடுவதில்லை என்று செய்துள்ள முடிவு அவர்பால் அனுதாபம் உள்ளவர்களைக்கூட ஆத்திரம் கொள்ளச் செய்திருக்கவேண்டும்.

இது நிற்க. காங்கிரஸ் கட்சி ஓமந்தூர் ரெட்டியாரைத் தலைவராக்கி யிருக்கின்றது. கட்சிக் கூட்டத்தை அதன் தலைவர் கலைத்துவிட்ட பிறகு அறிவிப்பு இன்றி அவசரமாகக் கூடிய கூட்டத்தில் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுத்தது செல்லுமா? செல்லாது என்பதே பொதுவான அபிப்பிராயம். ஆனால், தம்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறுவதைத் தடுக்கப் பிரகாசம் செய்த சூழ்ச்சி முறியடிக்கப்பட்டது வரவேற்கத் தக்கதே. என்றாலும், மீண்டும் சட்டப்படி அறிக்கை விடுத்துக் கூட்டப்படும் கூட்டத்தில் ஓமந்தூரார் தலைமையை

ஊர்ஜிதம் செய்தா லொழிய அது செல்லத் தக்கதல்ல. உண்மையில் பிரதமராய் வரமுடியாத—வர விரும்பாத—ஒருவரைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்தது இந்த மாகாண அரசியலிலே ஒரு புதுமையாகும். ஒருவேளை கட்சித் தலைவர் வேறு, பிரதமர் வேறு என்ற நிலைமையை இந்த மாகாணத்தில் ஏற்படுத்தவேண்டு மென்ற எண்ணத்தின்மீது இது செய்யப்பட் டிருக்கலாம். பிரதமரா யிருக்கும் ஒருவர் கட்சித் தலைவராய் இல்லாதிருப்ப தென்ருல், அவரது பிரதமர் பதவி அற்ப ஆயுளிலேயே முடியும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், பார்லிமென்டரி நுணுக்கங்கள் தெரியாத—அரசாட்சி செய்யும் அனுபவம் இல்லாத—ஒருவர் கட்சித் தலைவராக இருந்து பிரதமரை ஆட்டிவைப்ப தென்ருல், தன்மானம் உள்ள எவரும் பிரதமரா யிருக்க முன்வருவார்கள் என்று எண்ணுவதற்கில்லை. மேலும், அடுத்த பிரதமர் யார் என்பதில் ஒன்றுபட்ட அபிப்பிராய மில்லாத நிலையில் தற்காலப் பிரதமரை விரட்டிய செயல் வருங்காலத்தைப் பற்றி நம்பிக்கை அளிப்பதாயில்லை. இனியேனும் காங்கிரஸ் கட்சியில் கோஷ்டி முறை ஒழிந்து கொள்கையுடன் கூடிய கூட்டுறவு நிலவுமா? நிர்வாக ஆற்றலும், தெளிந்த அனுபவமும் உடைய ஒருவர் பிரதமராக வருவாரா? இதைப் பொறுத்துத்தான் பார்க்கவேண்டும்.

எது எப்படியாறைலும், அவசரச் சட்டத்தை—ஆலை ஒழிப்புத் திட்டத்தை—அமுல் நடத்திய அமைச்சர் குழு அழிந்ததைப் பற்றிப் பொதுமக்கள் வருந்தப் போவதில்லை.

செய்தித் திரட்டு

வ. உ. சி. படிப்பகம்:—திருமலைராயன்பட்டினம் வ. உ. சி. படிப்பகத்தின் ஆதரவில் பிப்ரவரி 6ஆம் தேதி காலை 10 மணிக்குத் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையின்கீழ்த் திரு. இரா. க. நாகராசன் வ. உ. சிதம்பரனாரின் திருவுருவப்படத்தையும், திரு. ச. அய்யாக்கண்ணு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் திருவுருவப் படத்தையும் திறந்து வைத்து அப்பெரியார்களின் சேவையையும் பண்பாட்டையும் பாராட்டிப் பேசினர்.

* * * *

ஒரிஸ்ஸா மாகாண எல்லைப் பிரிவினை:—சென்னை, பீகார், வங்காளம், மத்திய மாகாணம் ஆகிய மாகாணங்களை அடுத்துள்ள ஒரிஸ்ஸா மொழி வழங்கும் பகுதிகளை ஒரிஸ்ஸாவுடன் சேர்க்க வேண்டுமென்று அண்மையில் ஒரிஸ்ஸா சட்ட சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

* *

கரந்தைப் புலவர் கல்லூரி: இளங்கோவடிகள் தமிழ்க் கழக ஆண்டு விழா:—கடந்த பிப்ரவரி 23-ந் தேதி மாலை 4-மணிக்கு மேற்படி விழா கரந்தைப் புலவர் கல்லூரியில் திரு. ம. பொ. சிவஞானம் தலைமையில் நிகழ்ந்தது. திரு. பெரியசாமிப் புலவர் "நாட்டின் நிலை" என்பது பற்றி விரிவாகப் பேசினர்.

* * *

ஒரிஸ்ஸாவும் ஆலை ஒழிப்பும்:—ஆலை ஒழிப்புத் திருப்பணியில் சென்னை மாகாணத்தை ஒரிஸ்ஸா பின்பற்றவில்லை என்று திரு. ஜே. சி. குமரப்பா அறிவித்த குற்றச்சாட்டுக்கு ஒரிஸ்ஸா பிரதமர் திரு. ஹரி கிருஷ்ண மகதாப் பின்வருமாறு பதிலளிக்கிறார்: "ஆலை ஒழிப்பு வேலையை ஒரிஸ்ஸா விரும்பவில்லை. துணி உற்பத்திக் கொள்கை மாகாண அடிப்படையில் தீர்மானிக்கப்படக் கூடாது என்று நான் கருதுகிறேன். அகில இந்தியாவிலும் அமுலுக்கு வருவதாயிருந்தாலொழிய ஒரு தனிமாகாணம்—அதுவும் பிற மாகாணங்களிலிருந்து எல்லாப் பண்டங்களையும் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் ஒரிஸ்ஸா போன்ற ஒரு மாகாணம்—புரட்சிகரமான மாறுதலைக் கடைப்பிடிப்பதில் பயன் இல்லை. மற்ற மாகாணங்களில் என்ன நிகழ்ந்த போதிலும் ஒரிஸ்ஸா அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற வாதம் சரியல்ல"

தொழிலாளர்களும் - காங்கிரஸ் ஊழியர்களும்

நரஹரி பரீக்

சமீப காலம் வரையில் வேலை நிறுத்தம் போன்ற குழப்பங்கள் பெரிய தொழிற்சாலைகளிலும் நகரங்களிலுமே காணப்பட்டன. ஆனால் இப்பொழுது சிறிய பட்டணங்களிலுள்ள தோட்டிகள் போன்ற தொழிலாளர்களும்கூடச் சம்பள உயர்வுக்காக வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த மாதிரியான காரியங்கள் நடக்கும்பொழுது நாம் அவைகள் நியாயந்தானா என்று ஆராய்ந்து பார்ப்பதற்குப் பதிலாகக் கிசான் சபையும், செங்கொடிக்காரர்களும், கம்யூனிஸ்டுகளுமே அவைகளை உண்டாக்குகிறார்கள் என்று முடிவு செய்து வருகிறோம். அத்துடன் 50, 60 போக்கிரிகளை வைத்துக் கொண்டு தொழிலாளர்களைப் பயமுறுத்தி வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கிறார்களே யன்றி, தொழிலாளர்கள் தாங்களாக வேலை நிறுத்தத்தில் இறங்குவதில்லை என்றும் கூறி விடுகிறோம். அதனால் இப்படிக் கிளர்ச்சி செய்கிறவர்களையும் அவர்கள் கூலிக்கு அமர்த்தும் போக்கிரிகளையும் அடக்குவதைத் தவிர வேறு வழி கிடையாது என்று முடிவும் செய்துவருகிறோம்.

யோசனை கேட்கவும் தங்களுடைய குறைகளுக்குப் பரிகாரம் தேடவும் தொழிலாளர்கள் காங்கிரஸ்காரர்களிடம் செல்லாமல், துஷ்டத்தனம் செய்யும் அந்தக் கிளர்ச்சிக்காரர்களிடம் செல்வது ஏன்? காங்கிரஸ்காரர்களாகிய நாம் தொழிலாளர்களிடையில் இருபது வருஷ காலமாக வேலை செய்து வருகிறோம் என்றும், நாமே அவர்களுக்குச் சேவைசெய்கிறோம் என்றும் சொல்லுகிறோம். நம்முடைய ஸ்தாபனங்கள் வெகு நாளாகவும் வெகு திறமையாகவும் நடந்து வருகின்றன. இப்பொழுது சர்க்கார் அதிகாரமும் நம்மிடம் வந்து சேர்ந்திருக்கின்றது. அப்படி யிருந்தும் கிளர்ச்சிக்காரர்களுடைய மாயவலையில் சிக்காமல் இருக்கவும், போக்கிரிகளுக்கு அஞ்சாமல் இருக்கவும் நாம் தொழிலாளர்களுக்குப் போதிய பலமும் அறிவும் உண்டாக்க முடியாமல் இருக்கிறோமே அதன் காரணம் என்ன? ஆதலால் விஷயத்தைத் தீர்க்கமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மேற்கூறிய தோட்டிகள் முதலியவர்கள் மிகுந்த கேவலமான நிலைமையில் இருக்கிறார்கள். நம்மில் எத்தனை பேர் அவர்களிடம் சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்திருக்கிறோம்

என்று கேட்கிறேன். பணமுடையவர்கள் இந்த ஜனங்களின் உழைப்பைக் கொண்டே உயிர் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை மறக்க முடியாது. பணக்காரர்கள் தங்களை உயர்ந்தவர்களாகக் கருதிக் கொள்ளுகிறார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் ஏழைகளை அவமானத்திற்குள்ளாக்கத் தவறுவதில்லை. ஏழைகள் தரித்திர நிலைமையிலேயே இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஊழியர்களாகிய நாம் இந்த விஷயத்தை அவர்களிடம் தெளிவாகக் கூறும் தைரியமில்லாதவர்களாய் இருக்கிறோம். அவர்களுக்குக் கோபம் வந்து விடும், அவர்கள் பொதுக் காரியங்களுக்குச் செய்து வரும் உதவிகளை நிறுத்தி விடுவார்கள், நம்முடன் ஒத்துழைக்கமாட்டார்கள் என்று அஞ்சுகிறோம். ஆதலால் இந்த விஷயங்களை வெளியே சொல்லாமல் மௌனமாக இருந்து நம்முடைய மூலாதாரமான கொள்கைகளைக் காற்றில் பறக்கவிடுகிறோம். பணக்காரர்களை விரோதிக்கத் தைரியமில்லாததால், அவசரம் வேண்டாம் மெதுவாய்ச் செய்வோம் என்று வேதாந்தம் பேசுகிறோம்.

காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக்கொள்பவருடைய மனப்பான்மை இதுவானால், இந்த ஏழை மக்கள் பலாத்காரத்தின் மூலமாகவே பரிகாரம் தேட முடியும் என்ற நம்பிக்கையுள்ள கிசான் சபையினரிடம் யோசனை கேட்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?

காங்கிரஸ் சபையானது ஏழைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுக்காகவுமே உயிர் வாழ்வதாக எப்பொழுதும் கூறி வந்திருக்கிறது. அரசியல் நிர்ணய சபையும் அந்த லட்சியத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் காங்கிரஸ் ஊழியர்களாகிய நாமோ ஏழைகளைச் சுரண்டும் முதலாளிகளுக்கும் கள்ள வியாபாரம் செய்யும் சமூகத் துரோகிகளுக்கும் அதிருப்தி உண்டாக்கத் தைரிய மில்லாதவர்களாய் இருக்கிறோம். ஆனால் ஏழைத் தொழிலாளி மக்கள் விழிப்படைந்து விட்டார்கள். அவர்கள் கிளர்ச்சிக்காரர்களுடைய வலையில் சிக்குவார்களானால் அதற்குக் காரணம் நாம்தான். இங்கிலாந்து தேசத்தில் யுத்தத்தைத் திறமையுடன் நடத்தி வெற்றிகண்டவர் சர்ச்சில்; ஆனால் அவரும்கூடப் புதிதாக எழுந்துள்ள உணர்ச்சியை மதியாமல் பணக்காரர்களை ஆதரிக்க ஆரம்பித்ததால் படுதோல்வி அடைந்தார். அதுபோல் காங்கிரஸ்காரர்களாகிய நாமும் நடந்தால் அதே கதிதான் அடைவோம்.

தானுத் தாலுகாவில் ஆதிவாசிகள் (தாழ்த்தப்பட்டோர்) கலகம் நடந்தது. போலீசாரும் ராணுவத்தாரும் அதை அடக்கி அமைதியை

உண்டாக்கிவிடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதைக் கொண்டு அந்தப் பிரச்சினை முடிவடைந்துவிடும் என்று எண்ணிவிட வேண்டாம். சமூகமாகிய உடலில் ஏற்பட்டுள்ள நோய் புறத்தே காட்டும் அறிகுறிகளே அவைகள். இந்தநோயின் மூல காரணங்களை ஒழிக்க வேண்டுமேயன்றிப் புறத்தே காணும் அக்குறிகளை நீக்குவதால் மட்டும் பயன் உண்டாகாது.

கலகம் செய்தவர்களாகச் சொல்லப்படுகிறவர்கள் நிரம்பப் பயந்த ஜனங்கள் என்று எல்லோரும் அறிவார்கள். அவர்களுடைய வறுமையும் அறியாமையும் சொல்லுந்தரமல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவர்கள் அரசர்களாலும் நிலச்சுவான்தார்களாலும் லேவாதேவிக்காரர்களாலும் இவர்களைப் போன்ற பல புல்லுருவிகளாலும் சுரண்டப்பட்டு வந்திருக்கிறார்கள். ஆதிவாசிகள்தான் இந்த நாட்டிலுள்ள நிலம் முழுவதற்கும் சொந்தமானவர்கள். ஆனால் அவர்கள் அதே நிலத்தில் அடிமைகளாக உழைத்து வரும்படி செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நிலத்தைப் பிடுங்கிக்கொண்ட நிலச்சுவான்தார்களும், லேவாதேவிக்காரர்களும் அவர்களுடைய உழைப்பைக்கொண்டு மனச்சாட்சி ஒப்புக்கொள்ளாத அளவு லாபம் அடைந்து வருகிறார்கள். இப்படி அவர்களைக் கெடுத்து லாபம் அடைவதுடன் அவர்களுக்கு அநீதியும் கொடுமையும் செய்து வருகிறார்கள். இந்தக் காரியங்கள் நடைபெற்று வரும் வரை சாசுவதமான அமைதி நிலவும் என்று எதிர்பார்ப்பது வீணாகும்.

இத்தகைய நிலைமை வேறு பகுதிகளிலும் காணப்படுகிறது. அவர்கள் கலகம் செய்யவில்லை என்றால் அதற்குக் காரணம் அவர்கள் இன்னும் விஷயம் அறியாமல் இருப்பதும், ஒன்று சேர்ந்து காரியம் செய்ய ஏற்பாடு செய்யாமல் இருப்பதுமே யாகும். கலகம் செய்வதாலும் பலாத்காரத்தை உபயோகிப்பதாலும் இவர்களுக்கோ சமூகத்துக்கோ எந்த விதமான நன்மையும் உண்டாகப் போவதில்லை என்பது உண்மைதான். ஆயினும் அப்படிச் சொன்னால் மட்டும் போதாது. அவர்கள் கஷ்டங்களைச் சகிக்காமல் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். அதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? இதுவரை சுரண்டப்பட்டும் அடக்கப்பட்டும் வந்த ஜனங்கள் விழித்துக்கொண்டு விட்டார்கள். பரிபூரண விடுதலை கிடைக்கவேண்டிய காலமும் பொழுதும் வந்துவிட்டன. இனி யாரும் அதைத் தடுத்துவிட முடியாது.

"தமிழ் ஹரிஜன்"

மறைந்த வரலாறு

'பாமரன்'

அன்று

● புகழெனின் உயிரையும் கொடுத்து, பழியெனின் உலகொடுவரினும் கொள்ளாதது தமிழ்ப் பண்பாடு.

● தமிழரது ஆற்றலைப் பழித்த வேற்றரசரின் தலையில் கண்ணகித் தெய்வத்தின் கல்லைச் சுமத்திக் கண் குளிரக் கண்டது தமிழரது தன்மானம்.

● மாற்றான் விடும் வேலாயுதத்தைக் கண்டு கண்ணிமைத்துப் பின்வாங்காது கனன்று நோக்கி முன்னேறியது தமிழர் வீரம்.

● முக்கண் படைத்த சிவனார் நெற்றிக் கண்ணைக் காட்டி அச்சுறுத்தியபோதும் குற்றம் குற்றமே என்ற கற்பனைச் சித்திரம் தமிழ்ப் புலவனின் வாய்மை.

● இம்மையில் வறியோர்க்கு ஈந்தால் மறுமையில் வானுலகம் வாய்க்கும் என்ற அறவிலை வாணிகத்தை மறுத்து, 'இல்லை' என்பார்க்கு ஈந்து உவக்க வேண்டியது உடையானின் கடன் என்று வரையாது வழங்கிய வள்ளன்மை தமிழரின் அறம்.

● குடி மக்கள் மனமறிந்து கோலோச்சும் கொள்கை உடையதே தமிழர் அரசு.

● முறை செய்யும் அரசில் அறக் கற்பின் வழி நின்று ஆக்கும் தொழில் புரிவதும், முறை பிறழ்ந்த அரசில் மறக் கற்பின் வழி நின்று அழிக்கும் தொழில் புரிவதும் தமிழ்ப் பெண்டிர் கற்பு.

இது அன்றைத் தமிழ் இனத்தின் வீர வரலாறு. இந்த வரலாற்றை இன்று யார் அறிவார்? அது மட்டுமா?

இன்று

காந்தியடிகள் "கதிர் முனையில் சுதந்திரம் உண்டு" என்று சொல்லுகிறார். ஆனால், "தமிழன் வாளேந்திய கையில் நூலேந்தமாட்டான்" என்று முழங்கிய வீரம், தூத்துக்குடியில் தாம் துவக்கிய கப்பல் கம்பெனிக்கு வடநாட்டில் பெரும் பொருள் திரட்டும் செல்வாக்கு, வட இந்தியப் பெருந்தலைவர்களும் 'தென்னாட்டுத் திலகர்' என்று திக்கு நோக்கித் தெண்டனிடும் புகழ்—இவற்றைப் பெற்ற வீரர் சிதம்பரனாரின் முழு வரலாறு எங்கே?

ஆப்பிரிக்காவில் அண்ணல் காந்தியடிகளுடன் சேர்ந்து வெள்ளையரை எதிர்த்து வீரச் சமர் புரிந்து விண்ணெய்திய வள்ளியம்மை வரலாறு எங்கே?

அங்கமெலாம் தொழுநோய் பிடித்து ஆவி தளர்ந்த பொழுதும் தள்ளாடித் தடியூன்றித் தமிழ்நாடு முழுவதும் சுற்றித் தன் இறுதி மூச்சுவரை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர் முரசு கொட்டிய சுப்பிரமணிய சிவாவைப் பற்றிய வரலாறு எங்கே?

சிதம்பரனாருக்கு இன்னல் செய்த வெள்ளையனைச் சுட்டுக் கொன்று தன் உயிர் நீத்த வீரன் வாஞ்சிநாதனின் வரலாறு எங்கே?

தடிகொண்டு போலீஸ்காரர்கள் தாக்கியபோதும் கொடியைக் கொடுக்க மறுத்து உயிர் நீத்த திருப்பூர் குமரனின் வரலாறு எங்கே?

எல்லாம் மறைந்தன. புதுப்பிப்பார் யார்?

நாகரிகம் - பணமா?

'மோசி'

மனிதன் எவ்வளவோ வளர்ந்து வருகிறான். மாறுதல் அடைந்து வருகிறான். சில ஆயிர ஆண்டுகளுக்கு முன்னர் மனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்து வந்தான். இன்றைக்கு நாகரிகம் உடையவனாக இருக்கிறான். இந்த வேறுபாட்டைப் பார்க்க வேண்டுமானால் இப்பொழுதுங்கூடச் சென்னையில் திரிகிற நரிக் குறவர்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். நாகரிகம் என்றால் என்ன என்பது பெரிய கேள்வி. சிக்கலான கேள்விபுங்கூட. ஆனால் நாம் நரிக் குறவனை விட நாகரிகம் உடையவர்கள் என்பதை மறுக்க முடியாது.

அரசாங்கம் சுயநலத்தின் எதிரொலி. நரிக் குறவனை நாகரிகம் உடையவனாக ஆக்க எந்த அரசாங்கம் முயற்சி செய்யும்? யாரைப்பற்றித்தான் அரசாங்கத்துக்கு அக்கரை? இரும்புப் பெட்டியில் பொக்கிஷம் இருந்தால் அதற்குப் போலீஸ்காரன் காவல் உண்டு. உற்சவத்தில் திருட்டு என்றால் பந்தோபஸ்து உண்டு. மோட்டாரில் போகிறவர்களுக்கு இடையூறில்லாமல் ஒழுங்கு செய்யச் சட்டங்கள் உண்டு. ஜமீன்தார் வரி வசூலிப்பதற்குப் பக்க பலமாக அரசாங்க உதவி உண்டு.

ஆனால், நரிக்குறவன் எச்சில் உணவுக்கு நாயுடன் போட்டி இடவேண்டும்; நடந்து போகும் பாதையில் படுத்துறங்க வேண்டும், ஏழை வாலிபன் உணவுக்காகப் போரில் சேரவேண்டும்.

ஆகவே, யாவற்றுக்கும்—நாகரிகத்துக்கு, சட்டத்தின் பாதுகாப்புக்கு—முக்கியமானது பணம். நாகரிகத்துக்கு மறு பெயர் பணமோ ? தேவை அதிகமாகி அதைப் பூர்த்தி செய்து கொள்வதுதான் நாகரிகம். தேவை அதிகமாக ஆக நாகரிகத்தின் எல்லையும் வளர்ந்துகொண்டே போகிறது.

பல ஆயிர ஆண்டுகளுக்கு முன்னர் ஆதி மனிதர் பச்சை யாமிசத்தையும் காய்கனிகளையும் உண்டு பசியை ஆற்றிக்கொண்டார்கள். மாமிசத்தைச் சுட்டுத் தின்பவர்கள் அவர்களைவிட நாகரிகமுடையவர்கள். மாமிசத்தை வேக வைத்து வாசனைகள் சேர்த்து, கடித்துத் தின்றவர்கள் இன்னும் சிறிது நாகரிகம் அடைந்தவர்கள். அதையே நாற்காலியில் உட்கார்ந்து, தட்டுகளில் வைத்து, கத்தி கரண்டிகள் கொண்டு சாப்பிடுபவர்கள் இன்னும் நாகரிகம் அடைந்தவர்கள். தேவைகள் அதிகமாகிறது. தேவைகளைப் பூர்த்தி செய்யச் செய்ய இன்பம் ஏற்படுகிறது. தேவையைப் பூர்த்தி செய்யப் பணம் அவசியம். எந்தத் தேவையைப் பூர்த்தி செய்யவும் ஒரு 'விலை' கொடுக்கவேண்டுமல்லவா ?

சில காலத்துக்கு முன்புதான் பணம் வழக்கத்துக்கு வந்தது. அதற்கு முன்னும் எப்பொழுதும் மனிதனுக்குத் தேவைகள் இருந்தன. அந்தத் தேவைகளைப் பணமில்லாமல் எப்படிப் பூர்த்தி செய்துகொண்டான் என்று ஆச்சரியப்பட வேண்டாம். தன்னிடம் இல்லாத பொருளைத் தன் வசம் உள்ள பொருளின் மதிப்பைவைத்து வாங்கிக்கொண்டான். கேழ்வரகு இல்லாதவன் தன்னிடமுள்ள நெல்லைக் கொடுத்துக் கேழ்வரகைப்பெற்றான், மாங்காய் வேண்டியவன் தன்னிடமுள்ள தேங்காயைக் கொடுத்து மாற்றிக்கொள்ள விரும்புகிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். மாங்காய்

உள்ளவனிடமே தேங்காயும் இருந்துவிட்டால் பண்ட மாற்றம் எப்படி ஏற்பட முடியும்? அதற்காக அந்தக் காலத்தில் மதிப்பிடும் பொருளாக நெல்லை வைத்துக்கொண்டார்கள். ஒரு குறுணி நெல்லுக்கு இத்தனை மாங்காய், தேங்காய் என்று வழக்கத்தில் ஒரு முடிவு வந்து விட்டது. இந்த மதிப்பின் அளவானது அகப்படும் அளவு, வாங்க விரும்புவோரின் விருப்பம் இரண்டையும் பொறுத்திருந்தது. நாகரிகம் இல்லாத அந்தக் காலத்தில் பண்ட மாற்றுக்கு உதவியாக இருந்த நெல்லைப்போல இப்பொழுது பணம் இருக்கிறது. ஒரு நாற்காலியின் விலை 10 ரூபாய் என்று சொல்லுகிறோமே ஒழிய மூன்று மரக்கால் அரிசி என்று சொல்வது இல்லை. ஆகவே நாகரிகம் உயர உயர, மனிதன் தேவை உயர உயர, பணத்தின் மதிப்பு உயர்ந்து கொண்டே வருகிறது.

Demand

PRABHAT INK

High Grade

for Fountain Pens

Available From

PRABHAT TRADERS

Stationers, General Merchants, Importers & Exporters

4 & 5, Badrian Street, G. T., Madras.

Tele:—PRABAKAR, Madras.

Branches at:

KUMBAKONAM, TINNEVELLY.

கட்டுப்பாடு செய்யப்பட்ட வாணிகம்

அ. ச. ஞானசம்பந்தம்

தமிழ் நாட்டு வாணிகம் சிறந்த முறையில் நடைபெற்றது. அவ்வாறு நடந்தும் நாட்டின் பொருளாதார நிலையைக் குலைக்கக் கூடிய அளவில் நடைபெறவில்லை என்பதும் சில பாடல்களால் அறிகிறோம். ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களும் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களும் வெவ்வேறானவை. ஆனால், அவற்றின் மதிப்பு ஒன்றாகவே இருந்தன என அறிகிறோம். இன்றும் அதே நிலையில்தான் வெளிநாட்டு வாணிகம் நடைபெற்று வருகிறது. இதனைப் பழங் காலத்தில் பண்டமாற்று என்று கூறுவர். வெளி நாட்டிலிருந்து வருகிற பொருளுக்கு ஒரு விலையுண்டு. ஆனால், அவ்விலையை நேரடியாக நம் நாட்டில வழங்குகிற பணத்தால் கொடுக்கமுடியாது. ஏனென்றால், நம் நாட்டில் வழங்குகிற நாணயத்துக்கும் வேற்று நாட்டில் வழங்குகிற நாணயத்துக்கும் வேறுபாடு உண்டு. எனவே, வருகிற பொருள் எவ்வளவு விலை மதிப்புள்ளதோ அவ்வளவு விலை மதிப்புள்ள மற்றொரு சாமானை அவர்கள் நாட்டுக்கு அனுப்புவதன் மூலம் வாணிகம் இன்றும் நடைபெறுகிறது. அன்றும் நடைபெற்றது. இம்முறையில் இரண்டும் ஒத்த மதிப்புள்ள பொருள்களாக இருக்கவேண்டும் என அறிகிறோம். இக்கருத்தைப் பட்டினப்பாலை ஆசிரியர் நன்கு விளக்குகிறார். இவரும் மழை நீரையே உபமானமாகக் காட்டுகிறார். ஆனால், இவர் அவ்வுவமையைக் கையாளுகிற முறையே வேறு. மழையின் உற்பத்தி நாமறிந்ததே. கடலிலுள்ள நீரைச் சூரிய வெப்பம் ஆவியாக மாற்றிப் பிறகு மேகமாக்குகிறது. இம்மேகம் நிலப் பரப்பில் நெடுந்தூரம் செல்கிறது. மலைகள் நிறைந்த பிரதேசங்களில் மேகம் தன்

பாலுள்ள நீரை மழையாகப் பொழிகிறது. அம் மழைநீர் மீண்டும் சிறு கால்வாய்களாகத் தொடங்கிப் பெரிய ஆருக மாறி, இறுதியில் புறப்பட்ட கடலுக்கே வந்து சேருகிறது. கணக்கெடுத்தால் வரவும் செலவும் ஏறத்தாழ ஒன்ருகவே இருக்கும். வேறு வழியாகவும் இதனைக் கூறலாம். கடலிடத்திலிருந்து நீர் ஆவி வடிவாகச் சென்றது; நீர் வடிவாகத் திரும்பி வந்தது. இரண்டும் தன்மையால் மாறுபடினும் மதிப்பால் ஒத்தே உள்ளன அல்லவா? இம்மாதிரியே காவிரிப்பூம் பட்டினத்துத் துறைமுகத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் நடைபெறுகின்றன. தன்மையால் இரண்டு சரக்குகளும் மாறுபடினும் மதிப்பால் அவை ஒத்தவையே. இதனை அவ்வாசிரியர் கூறுமுறை நோக்கற்பாலது.

"வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி" (ப. பா-127-23)

இத்தகைய நிலையைத் தற்காலப் பொருளாதாரச் சொற்களில் கூறவேண்டுமானுல் சமன் செய் வாணிகம் (Balanced Trade) என்று கூறலாம்.

இதனைப் பார்க்கும்பொழுது எல்லா நாட்டினரும் அவரவர்கள் விருப்பம்போல் வேண்டுவனவற்றைக் கொணர்ந்து தமிழ் நாட்டில் வாணிகம் செய்யலாம் போலும் என்று நினைத்துவிடுதல் ஆகாது. அவ்வாறு செய்கின்றதைத் தற்காலத்தார் கட்டுப்பாடற்ற வாணிகம் (Free Trade) என்று கூறுவர். இத்தகைய ஒரு வாணிகமே நாட்டின் பொருளாதாரத் திட்டத்திற்கு ஏற்றது என்று வாதாடுகிறவர்களும் உண்டு. ஆனுல், இத்தகைய ஒரு நிலை, நாட்டின் பொருளாதாரத்துக்கும் தொழில் வளர்ச்சிக்கும் கேடு விளைப்பதாகும் என்று நினைக்கிறவர்களும் உண்டு. இவ்விரு கட்சியாரும் இன்றுங்கூட ஒரு முடிவுக்கு வரவில்லை. ஆனுல்,

பழந் தமிழர் இதனைப் பற்றி என்ன நினைத்தனர் என்று காணலாம்.

பழந் தமிழர் வேற்று நாட்டினருடன் செய்த வாணிகத்தை வரையறுத்தே (Regulated Foreign Trade) செய்தனர் என்றும் அறிகிறோம். அதனை எவ்வாறு வரையறுத்தனர் என்று அறிவது மிக இன்றியமையாதது. இன்றும் வேற்று நாட்டிலிருந்து அதிகமான பொருள்கள் வரக்கூடாதெனக் கருதினால் அரசாங்கத்தார் அதனைத் தடுப்பதற்கு ஓர் முறையைத்தான் கையாளுகிறார்கள். அதாவது அப்பொருளின்மேல் சுங்க வரியை உயர்த்திவிடுவதே (Higher Tariff) அம்முறை. அங்ஙனம் செய்வதால் பொருளுக்கு இயற்கையாக வைக்க வேண்டிய விலைக்குமேல் இந்தச் செலவையும் ஏற்றிவைத்து விற்க நேரிடுகிறது. அவ்வளவு விலை கொடுத்து வாங்க அப்பொருள் தகுதியற்றதாக ஆகிவிடுமேயானால அதனை யாரும் வாங்கமாட்டார்கள். வாங்காத பொருளை யாரும் இறக்குமதி செய்யமாட்டார்கள். எனவே, இம்முறையினால் வேற்று நாட்டு வாணிகத்தைக் கட்டுப்படுத்தலாம். இம்முறையிலேயே அன்றைய தமிழ் நாட்டில் வாணிகம் நடைபெற்றதெனப் பட்டினப்பாலை குறிக்கிறது. பட்டினப்பாலை கரிகாற் பெருவளத்தான் என்ற சோழ அரசன்மேல் பாடப்பட்ட அரிய பாடல். அவன் இமயஞ் சென்று புலிக்கொடி நாட்டி மீண்டவன். எனவே, அவனுடைய காலத்தில் தமிழ்நாடு கொழித்திருக்குமென்பதில் ஐயமில்லை. அவனுடைய முக்கியத் துறைமுகப் பட்டினம் 'காவிரிப்பூம் பட்டினம்'

காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்தில் பொருள்கள் வந்து இறங்குகின்றன. அவற்றைச் சுங்க இலாக்காவைச் சேர்ந்த அலுவலர்கள் வந்து பார்வை இடுகின்றனர். அவற்றின் மதிப்பை அளவிடுகின்றனர். பொருளின் மதிப்பென்பது எப்பொழுதும் ஒரு நிலையாக இருப்பதில்லை. அங்ஙனம் இருக்கவும் இயலாது. அப்பொருளுக்கு இருக்கும் அவசியத்தை(Demand)ப் பொறுத்து அதன் மதிப்பும்

(value) மாறுபடும் என்பது நாமறிந்த தொன்று. எனவே, அதன் அவசியத்தை, அப்பொழுதுள்ள நாட்டின் நிலையைச் சீர் தூக்கிப் பார்த்து அச்சுங்க அலுவலன் மதிப்பிடுகிறான். ஏற்ற முறையில் சுங்கம் விதிக்கிறான். இங்ஙனம் விதிக்கின்ற முகத்தாலேயே வெளிநாட்டு வாணிகத்தைக் கட்டுப்பாடு செய்கிறான். இதனை ஆசிரியர் நன்கு விளக்குகிறார். தினந்தோறும் இச்செயல் ஒய்ச்சல் ஒழிவின்றி நடைபெறுகிறது. இதனைச் செய்பவனும் மனத்தாலும் உடலாலும் வலிமை பெற்றவன். அங்ஙனம் சுங்கம் வசூலித்தமைக்கு அடையாளமாக மூட்டைகளின் மேல் சோழநாட்டு இலச்சினையாகிய புலிக் கொடியைப் பொறித்து, அவை மற்ற மூட்டைகளோடு கலந்து விடாதபடியும், கொடி பொறிக்கப்படாதவை நாட்டினுள் நுழையாமலும் கண்காணித்து, கொடி பொறித்த மூட்டைகளை மிகவும் காவல் பொருந்திய பாதுகாவலான இடங்களில் அடுக்குகிறான்.

"வைகல் தொறும் அசைவின்றி
வலியுடை வல்லணங்கினோன்
அருங்கடிப் பெருங்காப்பில்
உல்குசெயக் குறைபடாது
புலிபொறித்துப் புறம் போக்கி (ப. பா, 125.

[வைகல் தொறும்—தினந்தோறும்; அசைவின்றி—சோம்பர் இல்லாமல்; உல்கு-சுங்கவரி]

இவ்வரிகளி லிருந்து அறியவேண்டிய பொருள்கள் இரண்டுண்டு. அச்சுங்க அலுவலன் 'வலியுடை வல்லணங்கினோன்' என்று கூறப்படுகிறான். ஏன்? சுங்கம் வசூலிப்பவனுக்கு வலிமை எதற்காக? ஈண்டு வலிமை என்றது மன வலிமையை. அம்மனவலிமை இல்லாதவன் சுலபமாக இலஞ்சம் வாங்கிக்கொண்டு அரசனை ஏமாற்றுபவனாக ஆகிவிடலா மல்லவா? இந்நாளில் வாழும் நமக்கு இது ஒன்றும் புதுமை இல்லை. ஆனால், பழந்தமிழ் நாட்டில் அரச நீதியை நடாத்துபவர் எங்ஙனம் மனத்திட்பம் வாய்ந்தவராய் இருந்தனர் என இவ்வரிகள் அறிவுறுத்துகின்றன.

மேலும் ஒன்று நோக்க வேண்டும். அவன் வெறும் செம்மையுடையவனாக மட்டும் இருந்தால் போதாது. பிறர் அவனை ஏமாற்றுவர். அவர் அங்ஙனம் செய்யாதிருக்க, அவன் தனது அதிகாரத்தைச் செலுத்தக் கூடியவனாக இருக்க வேண்டும். இக் கருத்திலே ஆசிரியர் அவன் படை பலத்தாலும் தன் ஆதிகாரத்தைச் செலுத்தக் கூடியவனாக இருந்தான் என்பதை அறிவிப்பதற்காக 'வல்லணங்கினோன்' (பிறரை வருத்தக்கூடிய பலமுடையவன்) என்று கூறுகிறார். இம்மட்டோடு இல்லை. இவை யெல்லாம் இன்றுங்கூட இருக்கக் காண்கிறோம். ஆனாலும் திருட்டுத் தனமாகச் சரக்கை ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் பழக்கம் (Smuggling) இன்னும் நின்றபாடில்லை. அத்தகைய செயல் அந்நாளில் இல்லை என்பதை ஆசிரியர் "அருங்கடிப் பெருங்காப்பில்" பொருள்கள் இருந்தனவெனக் கூறுகிறார்.

இவ்வளவு சிறப்புடன் காவிரிப்பூம்பட்டினத்தில் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் எவை எவை என அவ்வாசிரியரே குறிக்கிறார்.

> "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
> காலின் வந்த கருங்கறி மூடையும்
> வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
> குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
> தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும்
> கங்கை வாரியும் காவிரிப் பயனும்
> ஈழத் துணவும் காழகத் தாக்கமும் (ப. பா. 185-91)

[பரி—குதிரை; கறி—மிளகு; ஆரம்—சந்தனம்; கங்கை வாரி—யானைத்தந்தம்; ஈழத்துணவு—இலங்கையிலுண்டான உணவுப் பொருள்; (தேங்காய் போலும்) காழகத் தாக்கம்—மலேயாவில்ஆக்கப்பட்ட நுகர்ச்சிப் பொருள்.]

இவற்றால் அரேபியா, மலேயா முதலிய வெளிநாட்டு வாணிகத்தோடு கங்கைவெளி, இலங்கை முதலிய உள் நாட்டு வாணிகமும் நன்கு நடந்தமை அறியப்படுகிறது.

களையும் பயிரும்

அ. முத்துசிவன்.

விவசாயம் பற்றிய கட்டுரை இல்லை. தயவு செய்து பயந்துவிட வேண்டாம். அப்படியானால் எதைப்பற்றிய கட்டுரை என்று கேட்கத் துணிகிறதல்லவா? கேட்பது நியாயந்தானே. படிக்கத் தொடங்கும் போதே இது எதைப்பற்றியது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

பொதுவான ஓர் அநுபவம் என்னவென்றால், அநேகமாக எது கவிதை, எங்கே கவிதை முத்திரை இருக்கின்றது என்பவற்றைச் சிறிது துணிந்து கூறி விடலாம். ஆனால் கவிதையைப் போலவே வடிவம் தாங்கி இருக்கின்ற ஒன்றை 'இது கவிதை இல்லை' என்று துணிந்து கூறுவது கொஞ்சம் கஷ்டமான காரியம். வயலிலே போய்ப் பார்த்தால், களைகூடப் பயிர்போலவேதான் பார்ப்பவர்களை மயக்கும். நம்மை யெல்லாம் கண்டால் அது நடுங்கப்போவதே கிடையாது. உல்லாசமாக நிற்கும். இன்னும் சொல்லப்போனால் நிமிர்ந்தே நிற்கும். களை பிடுங்குகிற எமனைக் கண்டுவிட்டால் நடுக்கம் ஏற்படும்.

இயற்கைப் படைப்பிலும் களை உண்டு. செயற்கைப் படைப்பிலும் களை உண்டு. வெளித் தோற்ற அளவில் ஒப்புமை இருக்கின்ற காரணத்தாலே மனிதனை ஏமாற்றக்கூடிய ஆற்றல் அதற்கு வாய்த்திருக்கின்றது. ஆகவே, எளிதில் மனிதனை ஏமாற்றிவிடுகின்றது. சில சிருஷ்டிப் பொருள்களோடு தோன்றும் களைகளுக்கு நீண்ட ஆயுள் கிடையாது. ஆனால், சில இனங்களோடு தோன்றும் களைகளுக்கு, ஏதோ உலக்கை கொண்டுதான் பிரமன் எழுதிவிட்டானோ என்று சந்தேகிக்கும்படி, அத்தனை அளவு ஆயுள் வளம் வாய்த்திருக்கிறது. இந்த வயிற்றெரிச்சலுக்கு என்ன செய்ய?

பெரும்பாலும் கவிதைப் பயிர்களுக் கிடையில் வளரும் களைகள் கவிதைக்குரிய மரியாதைகளை யெல்லாம் பெற்றுக்கொண்டு மிகவும் துணிவாகத்தான் கலை உலகில் உலவி வரும். மண்ணுளிப் பாம்பு மாதிரி அடிக்க அடிக்க எளிதில் சாகமாட்டா.

மாதிரிக்கு ஒரே ஒரு கதையைக் காட்டுகின்றேன். பார்த்துக் கொள்ளுங்கள்.

ஓர் ஊரில் ஒரு குடும்பம். பெரிய குடும்பம் ஏராளமான செல்வம் படைத்த குடும்பம். குபேரன்கூடச் சில சமயங்களில் அங்கே வந்து 'நோட்'டெழுதிக் கொடுப்பதுண்டு. அத்தனை செல்வம். அக்குடும்பத்திலுள்ள சொத்தை யெல்லாம் ஆளப் பிறந்தாள் ஒரு பெண்; வளர்ந்தாள். காதல் செய்யும் பருவத்துக்கும் உரியவளாகி விட்டாள். எவனோ ஒரு கட்டிளங் காளையோடு காதல் செய்யவும் ஆரம்பித்துவிட்டாள். இந்தப் பக்கம் திரும்பினால் பெற்ற தாய் 'என்ன வேண்டும்' என்று கேட்பாள். அந்தப் பக்கம் திரும்பினால் செவிலித்தாய் 'என்ன வேண்டும்' என்று கேட்பாள். எறிட்டுப் பார்த்தால் தோழியும் 'என்ன வேண்டும்' என்றே கேட்பாள். அத்தனை தூரம் அவளுடைய இச்சையை நிறைவேற்றுவதில் அவர்கள் ஆர்வம் காட்டுவதுண்டு. நன்றாகத்தான் வளர்ந்து வந்தாள். அதிகம் சொல்வானேன்? வீட்டிலுள்ள அத்தனை பேரும் உடம்பாகத் திகழ்ந் தார்கள்; அவள் உயிராகத் திகழ்ந்தாள். நிழலாவது உருவத்தை விட்டுக் கொஞ்சம் பிரிந்திருக்க இசைந்துவிடும். ஆனால் வீட்டி லுள்ளவர்கள் அவளை விட்டுப் பிரிந்திருக்க மாட்டார்கள். ஏன் மாட்டார்கள் என்றால், அவர்களால் முடியாது. அதனாலேதான்.

காதல் செய்கின்றவர்களுக்கு எப்பொழுதுமே கூட்டம் என்பது பிடியாத காரியம். பொல்லாத கோபம் வரும். அல்லது இல்லாத தளர்ச்சி வரும். எப்படியோ அத்தனை பேர் கண்களிலும் பொடி யைத் தூவிக்கொண்டு அதிக சிரமத்துடனே காதல் செய்து வந்தாள். ஆனாலும் வீட்டுக்காரர்களுக்குத் தெரிந்துவிடவே கொஞ்சம் அடக்குமுறை ஆரம்பமாயிற்று. தீப்பிடிக்கிற வீட்டுக்கு மேல்காற்று வீசினமாதிரி இந்த அடக்குமுறையானது அவளுடைய காதல் தீயை ஓங்கி எரியச் செய்ததே தவிர, ஒடுங்கி மறையத் துணை செய்யவில்லை. பார்த்தாள் தலைவி. இனிமேல் செல்லாது என்று தெளிவாகத் தெரிந்து விட்டது. ஆகவே யாருக்கும் தெரியாமல் காதலனோடு 'ஓடி'விட்டாள்.

வீட்டில் உள்ளவர்களால் பொறுத்துக்கொள்ள முடியுமா? பெற்ற தாய், பாவம், பொட்டலில் இட்ட புழுவாகத் துடிக்க ஆரம் பித்துவிட்டாள். 'இப்பொழுதே பிராணன் போய்விடும்' என்றெல் லாம் புலம்ப ஆரம்பித்து விட்டாள். கதற ஆரம்பித்து விட்டாள்

என்றே சொல்லலாம். இருக்காதா? என்ன இருந்தாலும் பெற்ற வயிறல்லவா? துடிக்கத்தானேசெய்யும்! செவிலித் தாய்க்கு மகள் போன கவலை வேறு. பெற்றவள் துடிக்கின்ற துடிப்பு வேறு. என்ன செய்வாள் பாவம்! "அம்மா, எப்படியும் தேடிவருகின்றேன்" என்று புறப்படுகின்றாள்.

காட்டுக்குள்ளேகூடி விழுந்தடித்து வருகின்றாள். அதிகத் தொலைவு நடந்து வரும்பொழுது அந்தணர் ஒருவர் எதிர்ப்படு கின்றார். நல்ல தவக் கோலம். அவரிடத்தில் கேட்டால் ஒரு வேளை தெரியலாமோ என்றெண்ணி அவரிடம் கேட்க வருகின்றாள்.

இந்த இடத்தில்தான் உலக இயற்கை எப்படியிருக்கிறது என்பதை ஆராய்ந்து கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் களவடிவான கவிதை எப்படியிருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

ஆத்திரத்தோடு ஒன்றைத் தேடிவருகின்றவன் எதிரே காண் பவனிடம் என்ன முறையில் கேட்பான்? தான் எப்பொருளைத் தேடி வருகின்றானோ அப்பொருளின் இயல்பைக் குறிப்பிட்டு அதனைப்பற்றி முதலாவதாகக் கேட்பானா அல்லது சந்தித்தவரின் அங்க வர்ணனைப் படலத்தை அரங்கேற்றிவிட்டு அப்பாலே தேடிவந்த பொருளைப்பற்றிக் கேட்பானா? எது உலக இயற்கை? சொல்லவே வேண்டாம். எல்லோருக்கும் எதுதான் உலக இயற்கை என்பது நன்றாகத் தெரியும். ஆனாலும் இது கட்டுரையாக இருக்கிற பாவத்தினாலே, எல்லோருக்கும் தெரிந்த ஒன்றை, தெரிந்திருந்தாலும் கூட, சொல்லித் தீர்க்க வேண்டியதுதான். எது உலக இயற்கை யென்றால் நாடி வரும் பொருளைப்பற்றி முதலாவது கேட்பதுதான்,

நமக்கு ஒரு களக் கவிதை கிடைத்திருக்கின்றது. மேலே இது வரை குறிப்பிட்டு வந்தோமே, ஒரு தலைவியைப் பற்றி, அவளைப் பற்றித்தான் அக்கவிதை தெரிவிக்கின்றது. என்ன தெரிவிக்கின்றது என்பதைப் பார்ப்போம்,

விழுந்தடித்து வருகின்ற—அங்கமெல்லாம் வாயாக அழுது வரு கின்ற செவிலி அந்தணரைக் கண்டதும் என்ன விதத்தில் கேட்கின் றாள் தெரியுமா? அவள் கேட்பதைத் தெரிந்துகொள்ளுமுன் அந்தணர் எவ்வாறு தோன்றினார் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

அவர் குடை பிடித்திருக்கின்றார். குடையின் பெரிய நிழல் தரையிலே விழுகின்றது. முக்கோலைத் தாங்கியிருக்கின்றார். ஒழுக்கம் மிகுந்தவர். கடத்தற்கரிய களர் நிலத்தில் நடந்து செல்கின்றார். அவர் நடந்து செல்லும் நிலம் யாருக்குச் சொந்தமென்றால் ஏழுலகங்களிலும் எட்டுத் திசைகளிலும் தனது புகழைப் பரப்பிய தஞ்சை வாணனுக்குச் சொந்தம்.

செவிலி இப்பொழுது அவரைப் பார்த்துக் கேட்கின்றாள் :

"ஒரு குடையின், இரு நிழலில், முக்கோல் ஊன்றி, ஒழுக்கத் திறல் சிறந்தவராய், அரிய வெங்களர் நிலத்தில் இயைந்து ஆறு செல்லும் அந்தணரே, ஏழு பாரும் மருவி எட்டுத் திசையிலும் முட்டிய புகழையுடைய வாணன் வாழும் தஞ்சைக்கு நிகரான ஒரு பெண்ணை இவ்வழியிலே ஓர் ஆணோடு போவதைக் கண்டீரா?"—இதுவே அவள் கேட்ட கேள்வி. கோடிட்ட அத்தனை வார்த்தைகளும் 1, 2, 3, 4, 5, 6, 7, 8 ஆகிய இலக்கங்களைக் குறிக்கின்றன.

இந்தக் கவிதை ஒன்று முதல் எட்டுவரையுள்ள இலக்கங்களை வருவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எழுதப்பெற்ற ஒன்றா அல்லது உள்ளூறப் பொங்கி யெழுந்த கவிதை வெறியினால் எழுதப் பெற்ற ஒன்றா? என் கேள்வியை நீட்டிக் கேட்க வேண்டும்? களையா? பயிரா? அவ்வளவுதானே! இனி, பாட்டைப் பார்ப்போம்.

"1ஒருவெண் குடை2இரு நிழன்3முக் கோல்கொண் டொழுக்கத்தி4றல்
அருவெங் களர்இ5யைந்(து) 6ஆறுசெல் வீர்அரு ளீர்7எழுபார்
மரு8எண் திசைபுகழ் வாணன்தென் மாறைஎன் வஞ்சியன்னாள்
பொருவெஞ் சுடரிலை வேல்ஒரு காளையின் போயினளே."

[இரு=பெரிய, ('றல்')என்பதற்கு ஓசை அளவில் 4 என்ற பொருள் உண்டு. பொருள் அளவில் இல்லை. அம்மாதிரியே இயைந்து என்பதிலுள்ள ('யைந்து')என்பதற்கும். ஆறு=வழி. ஆனால் இங்கே 6என்ற எண்ணையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.]

பிள்ளையைத் தேடி வருகின்ற செவிலி இப்படி எங்காவது சொல்வாளா? எண்ணத் தொகுதிக்காக இதய வாட்டத்தைத் தியாகம் செய்வாளா? செய்யத்தான் முடியுமா? இது கவிதையா?

யார் சொன்னது? இல்லவே இல்லை. கவிதைப் போலி, வெறும் களை. ஆனாலும் எழுநூறு வருஷங்களாக நிலைத்து வருவதுதான் அதிசயம்!

இனி, பயிரைப், பார்ப்போம்.

ஜாதிக் கவிதை, தமிழ்க் கவிதை எப்படி இருக்கவேண்டும்? கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் இலக்கணம் வகுத்துத் தருகின்றார்கள்;

"உள்ளத் துள்ளது கவிதை—இன்ப
உரு வெடுப்பது கவிதை,
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந் துரைப்பது கவிதை"

இதுவே அவர்கள் வகுக்கும் இலக்கணம். ஓர் அனுபவம் உள்ளத்தில் பதியவேண்டும். உணர்ச்சி மயமாக ஆகவேண்டும் அழகான வடிவில் நெஞ்சைப் பிளந்துகொண்டு வெளியே வரவேண்டும். அவ்வளவுதானா? கவிஞனுடைய உள்ளத்தைத் தைத்தபடி நமது உள்ளத்தையும் தைக்கவேண்டும். அவனுக்கு நிகர் நாமும் என்றாக வேண்டும். உணர்ச்சியில் திளைக்க வேண்டும். உன்மத்தம் கொள்ள வேண்டும்.

இதோ வருகிறது ஒரு கவிதை-அசலான பயிர்.

ஒருவன், வாழும் ஆசை கொண்டவனாக ஆகவே, இன்பமான வாழ்க்கைக்குரிய வழி துறைகளை யெல்லாம் அவனுடைய அறிவு, ஆற்றல் அனுபவம் என்ற அங்கங்களின் துணைகொண்டு தேட முயல்கின்றான். எத்தனை அளவு முயன்றும் வெற்றி கிட்டுவதாக இல்லை. எல்லாம் துன்பத்திலேயே முடிகின்றது. திருவரங்கப் பெருமானிடம் முறையிட்டாவது பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு ஏதோ முறையிட்டும் பார்க்கின்றான். ஆனாலும் சாந்தி கிட்டவில்லை. ஏனென்றால், ஆற்றிலே ஒரு காலும் சேற்றிலே ஒரு காலுமாக நிற்கின்ற காரணத்தால். பல நாள் துன்பம். துன்பத்தின் காரணமாக நடுக்கம். தளர்ச்சி. பல ஆண்டுகள் பறந்து செல்கின்றன. ஒரு மட்டிலும், நூல்களைப் படித்ததன் பயனாகவும் அறிஞர் பலருடைய அறிவுரைகளைக் கேட்டு வந்ததன் பயனாகவும் தானும் பலபடியாக மனச்சாந்திக்குரிய மார்க்கத்தைத் தேடி உழைத்த உழைப்பின்

பயனாகவும் சிறிது சிறிதாக அவனுடைய மனத்தில் மாற்றம் ஏற்படுகின்றது. மெள்ள மெள்ள உள்ளத்தில் தெளிவு உருவாகின்றது. இல்லாதவைகளுக் கெல்லாம் வேண்டாத இடத்தைக் கொடுத்து மயங்கிய மயக்க உணர்ச்சி மங்கி மங்கி மறைய ஆரம்பித்துவிட்டது. உண்மை எது, பொய் எது என்று பாகுபாடு செய்யும் தெளிவு நன்றாக உருவாகிவிட்டது. எதனால் என்றால், மற்றும் எத்தனையோ வாயிலாக அவன் தெரிந்துகொண்டதைவிட இயற்கையின் மூலம் நன்றாகத் தெரிந்து கொண்டதனால்.

கடவுளை வழிபட்டால் மனச்சாந்தி கிட்டும் என்பது பெரியோர்களுடைய உபதேசம். ஆகையினால் தன்னால் இயன்ற அளவில் செய்ய முடிந்த திருப்பணிகளைச் செய்து வழிபட்டு வருவதை அவன் நிறுத்தவே இல்லை. நாள்தோறும் நந்தவனத்துக்குச் சென்று, ஏதோ சில பூக்களைப் பறித்து, அவைகளைத் திருவரங்கநாதனின் திருவடிகளில் இடுவது அவனுடைய வழக்கம்.

அணுக்குண்டில் அளவற்ற நம்பிக்கை கொண்ட இந்தக் காலத்திலுங்கூடச் சர்ச்சிலும் ரூஸ்வெல்ட்டும் பீரங்கிகளுக்கு அடியில் நின்று 'பிரார்த்தனை' செய்ததை நாம் அறிவோம். எத்தனை கருவிகளைப் படைத்தாலும் ஆண்டவனுடைய கருணையாகிய பலந்தான் பலமே யொழிய மற்ற எதுவும் பலமாகாது என்ற நம்பிக்கையினால் தான் அவர்கள் பிரார்த்தனை செய்ய முன்வந்துள்ளார்கள். இந்தக் காலத்திலேயே இப்படி யென்றால் பழங் காலத்தைப் புற்றிக் கேட்கவே வேண்டாம்.

பூக்களைப் பறித்து வழிபாடு செய்துவரும் பக்தன் எந்நேரமும் பார்த்து வருகின்ற காட்சியையே ஒரு நாள் நன்றாகக் கவனித்துப் பார்க்கின்றான். அவ்வாறு பார்க்கும்படியான நிலைக்கு அவனுடைய மனமானது திருந்தி விட்டது. அவன் பார்த்த பார்வையின் வழியாக பெரிய உண்மை ஒன்று அவனுக்குத் தென்பட்டுவிட்டது. அந்தக் காட்சியும் அதனால் உணர்ந்த உண்மையும் என்ன என்று பார்ப்போம்.

பூக்களிலுள்ள தேனைக் குடிப்பதற்கு வண்டுகள் மொய்த்துக் கிடக்கின்ற காட்சியே அவன் தினமும் கண்டுவரும் காட்சி. எத்தனையோ முறை அக்காட்சியைப் பார்த்திருந்தும் அப்பொழுதெல்லாம் அவன் யாதொன்றும் தெரிந்துகொள்ளவே இல்லை. ஆனால், ஒரு

நான் அதே காட்சி சிறந்த ஓர் உண்மையை அவனுக்குப் புலப்படுத்தி விட்டது.

தேனை உண்ணும்வரை பூக்களைச் சுற்றி வண்டுகள் ஓலமிடு கின்றன. தேனை உண்ட பிறகு எவ்விதமான ஆரவாரமும் செய்யா மல் உறங்கிவிடுகின்றன. இந்த உண்மையை உணர்ந்து கொண்டதும் அவனுக்கு ஞானம் பிறந்து விட்டது. மனச் சாந்திக்குரிய மருந்து கிடைத்துவிட்டதாகவே அவன் எண்ணிவிடுகின்றான். "தேனை உண்ணும்வரை வண்டுகள் ஓலமிடுகின்றன. தேனை உண்டதும் நிலைத்த அமைதியோடு உறங்கிவிடுகின்றன. சரிதான். நமக்கும் அப்படித்தானே! ஆண்டவனுடைய அருளாகிய தேனை உண்ணும் வரை நமக்கும் சஞ்சலந்தான், உண்ட பிறகோ சாந்தி. பேஷ்! நல்ல வழி நமக்குக் கிட்டிவிட்டது" என்று உணர்ந்துகொண்டவ னாக, தான் உணர்ந்துகொண்ட அந்த உண்மையிலேயே திளைக்க ஆரம்பித்து விட்டான். வண்டுகள் தேனை உண்டு உறங்குவதையும் திருவரங்கப் பெருமான் உலகை உண்டு அறிதுயில் கொண்டிருப்ப தையும் எண்ணிப் பார்க்கின்றான். அவனை அறியாமலே உண்மையை உணர்ந்துகொண்ட வெற்றி மதுகையினால் உள்ளத்தினுள்ளே ஒரு வகையான உண்மை புலப்படுகின்றது. தெளிவு சித்திக்கின்றது. வெற்றி பெறலாம் என்ற தெம்பும் உருவாகின்றது.

'நெஞ்சே, என்ன பேதைமை உனக்கு! இத்தனை நாளும் அஞ்சி அஞ்சி என்னைச் சாகவைத்தாயே. அதோ பார், வண்டுகள் தேனை உண்டு உறங்குவதை. இன்னும் கோயிலுக்குள்ளே உலகை உண்டு திருவரங்கநாதன் உறங்குவதைப் பார். இனி ஏன் பயமெல்லாம்? என்னிடமே அவனை இருத்திக்கொள்வதற்கு நீ இருக்கின்றாய். அவனுடைய புகழைச் சொல்வதற்கோ ஆயிரம் ஆயிரமாகப் பாடல் கள் உண்டு. அவைகளைப் பாடி மகிழ்வதற்கோ நா உண்டு. கண்டிப் பாக அவனுடைய அருளாகிய தேனை என்னால் பருகமுடியும். அப்பாலே எனக்குச் சாந்திதானே! ஆகா, இத்தனை காலமும் தெரியாதிருந்த உண்மை இன்று எனக்குப் புலப்பட்டு விட்டது! இனி, பயமில்லை, நெஞ்சே! பயமில்லை,

"நாவுண்டு, நீ உண்டு, நாமம் தரித்தோதப்
பாவுண்டு, நெஞ்சே, பயமுண்டோ ?—பூவுண்டு
வண்டுறங்கு சோலை மதிலரங்கத் தேஉலகை
உண்டுறங்கு வான்ஒருவன் உண்டு."

"ஆம், உண்டு, உண்டு. நன்றாக உண்டு. நாவுண்டு. நெஞ்சே, நீ உண்டு. இன்னும் பா உண்டு. பாடும் குறியாக அவனும் உண்டு. இனிமேல் பயமுண்டோ? இல்லை இல்லை.'

"நாவுண்டு, நீ உண்டு, நாமம்தரித்தோதப்
பாவுண்டு, நெஞ்சே. பயமுண்டோ"?

"இனிமேல் ஏது? கிடையாது. ஒருமட்டிலும், நெஞ்சே, உண்மை தெரிந்து கொண்டேன். ஆம் நன்றாகத் தெரிந்து கொண்டேன். உலகை உண்டவன் உண்டு. அவன் புகழை விரிக்கும் பா உண்டு. அதனைப் பாட நா உண்டு. பயப்படவேண்டாம், நெஞ்சமே! இனி பயப்படவே வேண்டாம். ஏன்?

"நாவுண்டு, நீ உண்டு, நாமம் தரித்தோதப்
பாவுண்டு.

ஆகவே பயம் வேண்டாம்."

இப்படி எத்தனை தடவை சொன்னாலும் தெவிட்டாத தெள்ள முதாகத் தித்திக்கின்றது. 'ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தமாய தேனினைச்' சொரிகின்றது. எதனால் அப்படி? உண்மைக் கவிதையாக இருப்பதனால். உண்மைக் கவிதை என்பதற்கு என்ன அத்தாட்சி? வேண்டு மட்டும் இருக்கின்றதே அத்தாட்சி. இதய முத்திரை இருக்கின்றது. ஆத்ம அனுபவம் மின்னுகின்றது. தில்லை மணிபோன்று 'உண்டு, உண்டு, உண்டு' என்று வரும் வார்த்தை செவி நிறைத்துகின்று ரீங்காரம் செய்கின்றது. பாடியவனுடைய அனுபவம் பாடுபவனுடைய அனுபவமாக மாறுகின்றது. உண்மையைக் கண்ட தெம்பு உள்ளத்தில் உறைக்கின்றது. உள்ளம் கள்வெறி கொள்ளுகின்றது.

"நாவுண்டு, நீ உண்டு, நாமம் தரித்தோதப்
பாவுண்டு, நெஞ்சே, பயமுண்டோ?--பூவுண்டு
வண்டுறங்கு சோலை மதில்அரங்கத் தேஉலகை
உண்டுறங்கு வான்ஒருவன் உண்டு.''

இப்பொழுது தெரிகின்ற தல்லவா களையும் பயிரும்?

சார மொழிகள்

தமிழ்நாடு, தமிழன் என்ற உணர்ச்சியில் தணிகாசலமும் தாவூதும் ஒரே பண்பினரே!

*　　*　　*　　*

தமிழன் நாட்டில், தமிழன் பொருளாதாரத்தில் கைவைக்கப் பஞ்சாப் நினைத்தாலும் பம்பாய் நினைத்தாலும், மூகம்மது இஸ்மாயிலும் முத்துரங்கமும் ஒரே குரல் எழுப்புவர். அது தமிழ்க் குரல். அக்குரல் அவசியமானால் போராட்டத்தை ஏற்படுத்தும்.

வி. நூர் முகம்மது [கதிர்]

*　　*　　*　　*

சென்னை அசெம்பிளியில் சையத் மகம்மத் ஸ்தல ஸ்தாபன மசோதாவை ஆட்சேபித்துத் தமிழில் பேசினார். அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது திரு. நாகப்பா அவரை உருதுவில் பேசும்படி கேட்டார். அதற்கு சையத் மகம்மத் பதில் கூறுகையில்,

> **"தமிழிலேயே பிறந்து தமிழிலேயே வளர்ந்த நான் தமிழிலே தான் பேசுவேன்"**

என்று சொல்லி மீண்டும் தமிழிலேயே பேசினார்.

—"தினசரி" (15-2-47)

*　　*　　*　　*

மொழிவாரி மாகாணங்களின்றிப் புது அரசியலமைப்பு வருமானால், அந்த அரசியல் திட்டம் கர்னாடக, கேரள, ஆந்திர தேசங்களிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்குப் பிரயோசனப் படாது. சட்ட சபையிலும் நிர்வாகத்திலும் என்ன நடக்கிற தென்பதை மக்கள் அறியும்படி இருந்தால்தான் உண்மை ஜனநாயகம் வளர முடியும்.

—ஆர். ஆர். திவாகர்.

(கர்னாடக காங்கிரஸ் தலைவர், அ. நி. சபை அங்கத்தினர்)

எந்த மாகாணமாகிலும் பிறருக்குக் கட்டுப்படாமல் சுதந்திர மாயிருக்க விரும்பினால் அது அந்த லட்சியத்தை மன உறுதியுடன் கடைப்பிடித்து நிற்கவேண்டும். அப்படி நின்றால் அது நிச்சயம் சுதந்திரம் அடையும். —காந்தியடிகள்.

*   *   *   *

கேள்வி : மாகாணங்கள் தனித்தனியாகப் பிரிந்து பரிபூரண சுயேச்சையுடன் வாழ விரும்பினால் அவைகள் எந்த விதமான அரசியலை வகுத்துக்கொள்ள வேண்டும்?

காந்தியடிகளின் பதில் :

> இந்தியா முழுவதுக்கும் எவ்விதமான பரிபூரண சுயேச்சை அரசியல் வருக்கப்படுமோ அதுபோன்ற அரசியல்தான். பரிபூரண சுயேச்சைக்கு நான் கூறும் இலக்கணப்படி பார்த்தால் அதில் தவறு ஒன்றும் கிடையாது. —தமிழ் ஹரிஜன்

*   *   *

தமிழ் மாகாணக் கிளர்ச்சியில், கட்சி வேற்றுமை என்பது பறந்தோட வேண்டும். சாதி, இனப் பற்றுக்கள் தலைகாட்டக் கூடாது. கட்சி இன வேற்றுமை யின்றி, தமிழர்கள் எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொள்வதுபோல, தமிழிசை மாநாட்டில் கலந்துகொள்வது போல, "வடவேங்கடம் தென்குமரி யாயிடைத்" தமிழ் நிலத்தைக் காணும் கிளர்ச்சியிலும் ஒன்றுகூட வேண்டும். எந்தத் தனிக் கட்சியும் தனி இனமும் தனியாக நின்று இதைச் சாதிக்க முடியாது. ஏனெனில் அது தமிழ் மக்களின் கிளர்ச்சி யாகாது; ஒரு கட்சியின் கிளர்ச்சியாகத்தான் முடியும். —'புது உலகம்' (16-2-47

திருந்தியது யார்?

ஆர். சீனிவாசன்

தங்கவேலன் இராமகிருஷ்ண மடத்து விடுதியில் என்னோடு வாசித்தவன். ஒரு நாள் தங்கவேலன் தன் கிராமமாகிய வேலத்தில் 'கம்பர் விழா' நடத்த என்னைப் பேச அழைத்தான். நானும் தங்கவேலன் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசாமல் ஒப்புக்கொண்டேன். மாணவ வாழ்க்கைக்குப் பிறகு நண்பன் வாழ்க்கை என்னவாயிற்று என்று அறிய எனக்கு இப்போதுதான் வாய்ப்புக் கிடைத்தது.

குறிப்பிட்ட நாள் நானும் என் நண்பர் ஒருவரும் வேலம் கிராமத்திற்குப் புறப்பட்டோம். பஸ் நிற்குமிடத்திற்கும் அவன் ஊருக்கும் சுமார் பத்து மைல் தூரம் இருக்கும். இரட்டைக் காளை பூட்டிய வண்டியொன்றைத் தங்கவேலன் ஓட்டி வந்திருந்தான்.

மாலை வேளை. பாலாற்றங் கரைக்கு ஓரமான சாலை. சாலையின் இரு புறங்களிலும் ஓங்கி வளர்ந்த மரங்கள் பசுமையான காட்சி அளித்தன. நீல வானில் வெண்ணிலவு தன் தண்மெளியை அள்ளிச் சொரிந்துகொண் டிருந்தது. இயற்கை அன்னையின் எழிலனைத்தும் ஒருங்கு குவிந்தது போல அச்சூழல் விளங்கிற்று.

வண்டியில் பூட்டப்பெற்ற காளைகளும் இந்த இன்பமான காட்சியை நுகர்ந்துகொண்டே செல்வதுபோல மெதுவாகச் சென்று கொண்டிருந்தன. தங்கவேலனும் நானும் அரசியல் நிர்ணய சபை முதல் ஆலயப் பிரவேசம் வரையில் அரசியல் பிரச்சினைகளையும் சமூகப் பிரச்சினைகளையும் விவாதித்துக்கொண்டே போனோம். ஆலயப் பிரவேசத்தைப் பற்றிச் சிறிது அதிகமாகவே புகழ்ந்து பேசிவிட்டேன். இதைக் கேட்டு, 'உங்கள் ஆலயப் பிரவேசப் பேச்சைக் கேட்டவுடன் எனக்கு எங்கள் ஊரில் நிகழ்ந்த நிகழ்ச்சி யொன்று ஞாபகத்திற்கு வருகிறது' என்று தங்கவேலன் குறிப்பிட்டான்.

"அது என்ன தங்கவேலு?" என்று சிறிது ஆவலாகக் கேட்டேன்.

"வேண்டுமானால் சொல்லுகிறேன்; கேளுங்கள்."

* * * *

"எங்கள் ஊரில் வேலாயி என்ற தாழ்த்தப்பட்ட குலத்துப்பெண் ஒரு மிராசுதார் பண்ணையில் வேலை செய்துவந்தாள். சிறு வயது முதல் அவர் வீட்டுப் பசுக்களை மேய்த்து வருவாள். சாதாரண அழகுடையவள். தக்க வயதும் அடைந்தாள். மற்றைச் சமூகத்தார்போல அவள் தன் வீட்டில் அடைபட்டிருக்கவில்லை. வயது வந்த பிறகுங்கூட அந்த மிராசுதார் வீட்டில் வேலை செய்து வந்தாள். பிழைக்க வழி வேண்டுமல்லவா? மற்றவர்கள் 'மானம்' என்ற பெயரால் வீட்டினுள் அடைபடுகிறார்கள். அதே மானத்துக்காக 'வேலாயிகள்' வெளியே அலைபடுகிறார்கள்.

அந்த மிராசுதாருக்கு ஒரே பிள்ளை. அவன் தாய் இறந்துவிட்டாள். 1942-ல் நடந்த ஆகஸ்டுப் புரட்சியில் சிறை சென்று, கடந்த ஆண்டுதான் விடுதலையானான். தன் தந்தையுடன் கிராமத்திலேயே வாழ்க்கை நடத்த ஆரம்பித்தான். அவர் தம் மகன் மீது அளவு கடந்த அன்பு செலுத்தி வந்தார். அவனைத் தம் உயிர்போல மதித்து வந்தார்.

இருந்தாற்போல இருந்து ஒரு நாள் அவனை மிராசுதார் அவன் அறையிலிருந்து கூப்பிட்டனுப்பினார். "இனி நீ என் வீட்டில் இருக்கவேண்டாம்; வேலாயி வீட்டுக்கே போய்விடு" என்று கத்தினார்.

'மிராசுதார் மகன் விஷயம் இன்னதென்று புரிந்துகொண்டான். வேலாயியின் மடியின்மீது தலைவைத்துக்கொண்டு முன் நாள் மாலை அவளுடன் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்துச் சட்டென்று மறைந்தது வேறு யாரும் இல்லை என்பதை உணர்ந்துகொண்டான்.

"இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?" என்று சிறிது தைரியமாகவே கேட்டான்.

"இனியேனும் சீர்திருந்துவாயா?"—இது மிராசுதாரர் கேள்வி,

"நான் செய்வது சீர்திருத்தந்தானே" என்று அவன் சிறிது நிறுத்தி நிறுத்திப் பதில் சொன்னான்.

"சேரிப் பெண்ணோடு குலாவுவதுதானா சீர்திருத்தம்?" என்று மறுபடியும் கத்த ஆரம்பித்தார் மிராசுதாரர்.

சிறிது நேரம் இருவரும் மௌனம் சாதித்தனர். மெதுவாக அவன் "நான் அவளைத்தான் மணக்கப் போகிறேன்: என் மனச்சாட்சி அவளை மணப்பது தவறு என்று சொல்லவில்லை" என்று சொல்லி விட்டுச் சும்மா இருந்தான்.

தந்தை இதைக் கேட்டார். "ஏது, காரியம் மிஞ்சி விட்டது. இனி, என் வீட்டை விட்டு நட" என்று ஆத்திரத்தோடு முழங்கினார்.

அவனும் அஞ்சவில்லை. வீட்டை விட்டு எங்கேயோ சென்று விட்டான். நாள் ஆக ஆக மகனைப் பிரிந்த துக்கம் பெருகிக் கொண்டே வந்தது. ஊராரிடம் தம் மகன் ஒழுக்கத்தைக் கூற நாணினார். கேட்பவர்க்கெல்லாம் தம் மகன் சென்னையில் தன் அம்மான் வீட்டுக்குப் போயிருக்கிறான் என்று சொல்லி வந்தார். தம் மகனைக் காண வேண்டும் என்ற வேட்கை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வந்தது. மாதம் இரண்டாகி விட்டது.

* * * *

பாலாற்றில் நீர் பெருகி ஓடிக்கொண்டிருந்தது. மழை மிகுதியாகப் பெய்ததால் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. அமாவாசைக்குப் பிறகு ஆறாம் நாள். கரிய மேகங்கள் கண்ணுக்குத் தோன்றாதபடி பிறைச் சந்திரனை மறைத்துக் கொண்டே இருந்தன. கரையில் மணல் மேட்டில் இரு காதலர்கள் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

திடீரென்று தன் காதலியைக் கரையிலேயே இருக்கச் சொல்லி விட்டு அவ்வாடவன் மட்டும் ஓடும் நீரில் குதித்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் மற்றோர் உருவத்துடன் நீந்திக் கரையேறினான். அவ்வுருவம் வேறு யாரும் இல்லை மிராசுதாரரே. இருவரும் அவரைச் சேரியிலுள்ள ஒரு குடிசைக்கு எடுத்துச் சென்றார்கள்.

மிராசுதாரரை மூர்ச்சை தெளிவித்தார்கள். அவரும் கண் திறந்தார். தம் எதிரே தனக்குச் சிகிச்சை செய்துகொண்டிருந்த முஸ்லிம் இளைஞனைக் கண்டார். இவன்தான் தன்னைக் கரையேற்றியவன் என்பதை உணர்ந்தார்.

"எதற்காக நீரிலிருந்து என்னை எடுக்க வேண்டும்?" என மனங் கசந்து கேட்டார். முஸ்லிம் இளைஞனுக்கு ஒன்றும் புரியவில்லை. "தண்ணீரில் விழுந்தவரை எடுத்தது தவறா? எனக்கு ஒன்றும் தாங்கள் கேட்பதே புரியவில்லையே! வாழ்க்கை ஏன் உங்களுக்கு அவ்வளவு கசந்து விட்டது?" என்று மிகப் பரிதாபத்தோடு கேட்டான்.

"மிராசுதாரர் கண்களில் நீர் துளிக்க ஆரம்பித்தது. வருத்தமே உருவமாகக் காணப்பட்டார். "எனக்கு ஒரு மகன் உண்டு; கிட்டத் தட்ட உன் வயசுதான் அவனுக்கும். அவன் வீட்டை விட்டு எங்கேயோ போய்விட்டான். அவன் போய் இரண்டு மாதங்களுக்கு மேலாகிறது. அவன் போய்விட்ட பிறகு எனக்கு என்ன வாழ்க்கை இருக்கிறது?" என்று கண்ணீர் விட்டுக்கொண்டே கூறினார்.

"ஏன் அவன் ஓடிப்போய்விட்டான்?" என்று கேட்டான் அவ்விளைஞன்.

"உங்களுக்குக் கேட்கப் பிடிக்காது. எப்படிச் சொல்லுவது?" என்று தயங்கினார் மிராசுதார்.

"பரவாயில்லை. சொல்லுங்கள். கேட்கலாம்" என்றான் அவ்விளைஞன்.

"வேலாயி என்று ஒரு தீண்டாதார் குலத்துப் பெண் என் வீட்டில் வேலை செய்து வந்தாள். என் மகன் அவளை நேசித்தான். உறவும் அதிகமாகிக்கொண்டே வந்தது. நான் சிறிது அதிகமாகவே அவனைக் கண்டித்துவிட்டேன். பிறகு அவன் எங்கேயோ வீட்டை விட்டுப் போய்விட்டான். நான் தான்........" என்று கூறினார். அழுகை அவரை மேலே பேசவிடவில்லை.

"அழாதீர்கள். இப்போது என்ன செய்யலாம்? அவன் போகிற போக்கில் விட்டுப் பார்த்திருக்கலாம். எங்கள் சாதியில் அப்படி

யொன்றும் அவ்வளவு கட்டுப்பாடில்லை. நாங்கள் ஹரிஜனப் பெண்ணையும் மணப்போம். வேறு எந்தக் குலத்துப் பெண்ணையும் மணப்போம். எல்லாம் உங்கள் இந்து மதத்தின் கோளாறுதான். என்ன தான் இருந்தாலும் உங்கள் பையனுக்கும் அவ்வளவு துடுக்குத்தனம் கூடாது. நேற்றுச் சம்பாதித்த ஒருத்தியின் உறவுக்காகப் பெற்று வளர்த்த தந்தையை வருந்தவிட்டு ஓடலாமா......?"

'அப்படியெல்லாம் என் மகனைப் பற்றி ஒன்றும் சொல்லாதீர்கள். பேரும் தங்கவேலு; குணமும் தங்கம்தான். அவனுக்குப் பிடித்தமானவள்தான் என் மருமகளே தவிர, எனக்குப் பிடித்தவளா அவன் மனைவி? பழையவர்கள் செய்த ஏற்பாடல்லவா என் மகனை என்னை விட்டுப் பிரித்துவிட்டது? எங்கே இருக்கிறானோ? என்ன சங்கடப் படுகிறானோ? ஐயோ!......மதமாவது சமூகமாவது? என் மகனைப் பார்த்தால் போதும் என்றிருக்கிறது. அவன் உயிரோடிருக்கின்றான் என்று கேட்டால் அதுவே போதும்'' என்றார் அப்பெரியவர்.

"ஆமாம், அவன் அந்தச் சேரிப் பெண்ணை மணந்து வாழ நீங்கள் சம்மதிக்கலாமா? உங்கள் சமூகத்தார் என்ன சொல்லுவார்கள்? அவனோடுகூட இருந்து நீங்கள் வாழமுடியுமா?" என்று இளைஞன் கேட்டான். "சேரிப் பெண்ணை மணந்தாலும் மணக்கட்டும். என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும். அவனைப் பார்த்தால் போதும்" என்றார்.

"வேலாயி!" என்று அழைத்தான் அவ்விளைஞன். வேலாயியும் நாணத்தோடு இளைஞன் பின் நின்றாள். அவன் துருக்கித் தொப்பியைத் தூர எறிந்தான். புனைந்திருந்த தாடியைக் களைந்து நின்றான்.

* * * *

மிராசுதார் தம் மகனையும் மருமகளையும் கண்ணாரக் கண்டார். மனமார வாழ்த்தினார். அதற்குப் பிறகு அந்தச் சேரிக் குடிசையில் தான் அவர்கள் தம் வாழ்க்கையை நடத்துகிறார்கள். சேரிக்கு வேண்டிய தொண்டுகளைத் தம்மாலியன்ற அளவு செய்து வருகிறார்கள்.

* * * *

"தங்கவேலு, நீ சொல்லி வந்த இக்கதை நாவலாசிரியர் கற்பனையைக்கூடக் கடந்ததாக இருக்கிறதே! கேட்கவே நன்றாக இருக்கிறது. ஆலயப் பிரவேசம் ஒன்றும் இதைவிடப் பெரிய சீர்திருத்தம் என்று கூறமுடியாது" என்று என் கருத்தைத் தெரிவித்தேன்.

"அந்தக் குடிசைக்கு அழைத்துப் போகிறேன், வருகிறீர்களா?" என்று அழைத்தான். நானும் அவர்களைப் பார்க்க ஆவல் கொண்டேன். அந்தக் குடிசைக்குச் சென்றோம். முகமலர்ச்சியோடு காணப்பட்ட பெரியார் ஒருவர் என்னையும் என் நண்பரையும் வரவேற்றார். அவர்தான் மிராசுதாரராக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டோம்.

வேலாயி என்ற அந்தப் பெண்ணும் சுறுசுறுப்பாக வேலைசெய்து கொண்டிருந்தாள். அப்பெரியார் கம்பர் கூட்டத்திற்கு நான் பேச வந்ததைக் குறித்துத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார். பிறகு எங்களைச் சாப்பிடும்படி உபசரித்தார். நான், "நாளை எப்பொழுதாவது பார்த்துக்கொள்ளலாம். இன்று இந்தப் பிள்ளை வீட்டில் என் வருகைக்காகக் காத்துக்கொண் டிருப்பார்கள். விடை கொடுங்கள்" என்றேன்.

"அப்படியா? சரி, பின்னே தங்கவேலு வீட்டிலேயே சாப்பிடுங்கள்" என்றார். அவ்வாறு கூறிறவர் தங்கவேலைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சிரித்துத் தலையை ஆட்டினார். பிறகு அவனைப் பார்த்து, "சரி, அவர்கள் பசித்திருக்கிறார்கள். முதலில் அழைத்துச் சென்று சாப்பாட்டு வேலையை முடித்துவிடு" என்றார்.

தங்கவேலு குடிசையினுள் நுழைந்து "வேலாயி, செம்பிலே தண்ணீர் கொண்டு வா" என்றான்.

கூட இருந்த என் நண்பர், "ஏது, தங்கவேலனை உங்கள் பத்திரிகையின் துணை ஆசிரியனாக அமர்த்தலாம்போல் இருக்கிறதே! கதை சொல்ல வல்லவன்தான்" என்றார்.

"சீர்திருந்த வேண்டியது யார்?" என்ற கேள்வி என் மனத்தில் எழுந்தது.

கடன்காரன் கனவு

போ. குருசாமி

கடன்காரன்: *இரண்டாயிர ரூபாய் மட்டும் கிடைத்தால்—அடடா! என்னமாய் இருப்பேன் தெரியுமா? ஏ அப்பா......!*

பங்காளி: *என்ன பண்ணுவாய்? சட்டியும் பானையும் பண்ணுவாயோ? இதுவரை கிழித்த கிழிசல்தான் ஊரெல்லாம் தெரியுமே! பண்ணுவாராம்! ஆளைப் பார் ஆளை.*

கடன்காரன்: *ஏன்? என்னை உனக்குத் தெரியாது. அவ்வளவுதான் சொல்லுவேன். நீதான் இரண்டாயிர ரூபாய் கொடுத்துப் பாரேன். நான் சொல்லுவது சரியா இல்லையா என்பதை அப்புறம் சொல்.*

பங்காளி: *நான் உனக்குப் பணம் கொடுக்கிற நிலையிலே இருந்தால், நீ எங்கே, நான் எங்கே? ஒழிவற்ற வறுமைக்கு உடன் ஒப்பந்தம் எழுதிக் கொடுத்த ஒற்றுமைதானே நம் இருவரையும் சேர்த்து வைத்திருக்கிறது! பணப் பைக்கு வெறும் பையோடு ஏதப்பா உறவு? ......சரி, அதெல்லாம் எதற்கு? நீ என்னமோ—அத்தைக்கு மீசை முளைத்தால்... என்று பேசுகிறாயே! இரண்டாயிர ரூபாய் உனக்குக் கிடைத்துவிட்டது என்று வைத்துக்கொள். என்ன பண்ணுவாய்?*

கடன்காரன்: *அடே அப்பா! அதை ஏன் கேட்கிறாய்? அப்புறம் நான்தான் இந்த நாட்டுக்கே பெரிய மன்னன். என்னென்ன பண்ணுவேன் தெரியுமா......*

பங்காளி: அட, சரிதானப்பா. சும்மா அளக்காதே. அந்தப் பணத்தை வைத்து என்ன செய்வாய்? அதை மட்டும் சொல்.

கடன்காரன்: அந்தப் பிச்சைக்காரப் பயல் மார்வாடி இருக்கிறான் பார், அவனுக்கு ஒரு நானூறு ரூபாய் கொடுக்க வேண்டும். எனக்கு ரூபாய் கிடைத்தவுடன் நேரே அந்த நாயிடம்தான் போவேன். அந்த உதவாக்கரை மூஞ்சியைப் பார்த்து நானூறு காசை வீசி எறிந்துவிடுவேன். பிறகு...

பங்காளி: பணம் வருகிறது என்றவுடனே என்ன விறைப்பு! உனக்குக் கடன் கொடுத்தவனுக்கு எத்தனை பட்டமப்பா? பிச்சைக்காரனும், நாயாம், உதவாக்கரையாம்! 'சரிதான். ம்ம்ம். சொல்லப்பா சொல்லு. உன் கதை முழுவதுமே கேட்கலாம். அப்புறம்......

கடன்காரன்: நூற்றைம்பது ரூபாயைக் கொண்டு துணிமணிகள் வாங்குவேன். ஜம்மென்று எப்போது பார்த்தாலும் வெள்ளைத் துணிதான் கட்டுவேன். பிறகு ஒரு கைக்கடிகாரம் வாங்குவேன். எல்லாம் நேரப்படிதான். இன்னும்........

பங்காளி: பரவாயில்லையே. கடன்காரனுயிருக்க நீதானப்பா சரியான ஆள். அருமையான கனவுகள்! பிறகு..

கடன்காரன்: பிறகென்ன? ஒரு ரேடியோ வேண்டும். இந்தக் காலத்திலே அதெல்லாம் கட்டாயம் வேண்டும். சாதாரணமான ரேடியோவாய் இருக்கக் கூடாது. அறுநூறு ரூபாயாவது அதற்கென்று ஒதுக்கிவிட வேண்டும். பிறகு, எங்கள் அக்காள் மகளுக்குத் திருமணமாம். அதற்காக

இருநூறு முந்நூறு செலவழியும். அப்புறம் நல்ல புத்தகங்களாக ஒரு நூறு நூற்றைம்பது ரூபாய்க்கு வாங்க வேண்டும்......

பங்காளி: சரி சரி. ஒரு முக்கியமான சாமானை விட்டு விட்டாயே!

கடன்காரன்: என்ன என்ன! சொல்லு. அதையும் வாங்கிவிடலாம். பணம்தான் இருக்கிறதே. ம்ம்ம்........ சொல்லு.

பங்காளி: வேறு ஒன்றுமில்லை. ஒரு திருவோடு தான்......

கடங்காரன்: ஆ......என்னப்பா என்னை என்ன கேலியா செய்கிறாய்? திருவோடு எதற்கப்பா?

பங்காளி: இவ்வளவு செலவையும் செய்த பிறகு அப்புறம் என்ன பண்ணுவது? அதற்காகத்தான்.

நாவினால் சுட்ட புண்!

"தமிழ்ப் புலவர்களாயிருந்து, சர்வ சகஜமாய் உபயோகப் படும் மின்சார விளக்கு விசிறியின் 'ஸ்விட்ச்'சைப் போடத் தெரியாதவர்களை நான் பார்த்திருக்கிறேன். முதல் பாரம் படித்த பிறகு நான்கு வருஷம் படித்த வித்வான்கள் உயர்தரப் பள்ளிகளில் எல். டி கிரேடு சம்பளம் கேட்கிறார்கள். அது நியாயமில்லை."

—கல்வி அமைச்சர் திரு. அவினாசிலிங்கம்
[சுதேசமித்திரன் 17-2-47]

ஒரு சந்தோஷச் செய்தி

'சினிமா ரசிகன்'

மாதப் பத்திரிகை.

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே காலத்தில் வெளிவருவது

●

- அழகிய மூவர்ணப் படங்கள்
- அறிஞர் பலரின் கட்டுரைகள்
- பட விமர்சனங்கள்
- சினிமாக் கதைகள்
- உங்கள் கேள்விக்குப் பதில்

......இன்னும் பல அம்சங்கள் அடங்கியுள்ளன.

●

தனிப் பிரதி அணா **8** :: *வருடச் சந்தா ரூபா* **6**

தமிழ்நாடெங்கும் ஏஜெண்டுகள் தேவை

தலைமைக் காரியாலயம் :	கிளைக் காரியாலயம் :
"சினிமா ரசிகன்"	207-A, பார்பர் ஸ்ட்ரீட்,
ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை ஸ்டேட்	கொழும்பு.

இட மதிப்பு

"சேனாவரையன்"

இருக்கின்ற இடத்துக்கேற்றவாறு வெவ்வேறு மதிப்பை ஓரே எண் பெறுகிறது. இது சாதாரணமாக எல்லோரும் உணரக்கூடிய உண்மை. இதே மாதிரியாக மொழியிலும் சொற்களுக்கு இட மதிப்பு உண்டு. சாதாரண வழக்கில் இவ்வுண்மையைக் காணமுடிகிறது. ஆயினும் அவ்வுண்மையை நாம் எளிதில் உணர்ந்துகொள்வதில்லை. இவ்வாறே, வழக்கிலுள்ள சொற்களையும் சொற்றொடர்களையும் தொகுத்து வைத்து எண்ணிப் பார்க்கும்போதுதான் சொற்களுக்கும் இடமதிப்பு உண்டு என்ற உண்மையை உணர்கிறோம்.

நண்பர்கள் சிலர் ஒரு விஷயத்தைப் பற்றி விவாதம் செய்கிறார்கள். விவாதத்தின் முடிவில் ஏதோ ஒரு முடிவுக்கு வருகிறார்கள். அவர்கள் கொண்ட முடிவைப் பற்றிப் பலர் தத்தம் கருத்தை வெளியிடுகிறார்களென்று வைத்துக் கொள்வோம்:—

ஒருவர்: 'கொள்ளத் தக்கதுதான் அது' என்று சொல்லுகிறார். இன்னொருவர் 'கொள்ளத்தான் தக்கது அது' என்று கூறுகிறார். மற்றொருவர் "கொள்ளத்தக்கது அதுதான் என்கின்றார். ஒரே முடிவைப்பற்றி, அது ஏற்றுக்கொள்ளத் தக்க கருத்து என்ற ஒன்றிய கருத்தை மூன்று பேர்கள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையாக வெளியிடுகிறார்கள்.

முதலாமவர் சொன்னது, 'கொள்ளத் தக்கதுதான் அது' என்பது. இவர் ஒரு பெரிய மேதாவி என்று வைத்துக் கொள்ளலாம். 'பையன் ஏதோ சுமாராகப் படிக்கிறான்' என்று ஓர் ஆசிரியர் தம் மாணவனைப் பற்றிச் சொல்லுவதைப் போன்றது இந்தக் கருத்து. 'நண்பர்கள் செய்த முடிவு ஏதோ பரவாயில்லை; ஏற்றுக் கொள்ளலாம்; ஏற்றுக் கொள்வதால் குறையொன்றுமில்லை' என்பதுதான் முதலவருடைய கருத்து.

இரண்டாவதாகத் தம் கருத்தை வெளியிட்டவருக்கு நண்பர்கள் செய்த முடிவு மிகவும் பிடித்திருக்கிறது. நண்பர்கள் செய்த முடிவு சரிதான் என்ற நிலைமையும் தாண்டி, அது மறுக்க முடியாத முடிபு என்று சொல்லுகிற நிலையில் இரண்டாமவர் இருக்கிறார். 'ஏற்றுக்கொள்ளத்தான் தக்கதே தவிர, தள்ளத் தக்கதன்று' என்பது அவர் கூற்று.

"நண்பர்கள் செய்த முடிவைத் தவிர வேறொன்றுமே சரியானதாக இருக்கமுடியாது"—இது மூன்றாமவருடைய கருத்து.

நண்பர்கள் செய்த முடிவு சரியானது என்று மூவரும் கருதுகிறார்கள். ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வோரளவில் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

இந்த மூன்று பேருடைய கருத்துக்களிலும் உள்ள நுட்பமான வேறுபாட்டைக் காட்டுவது, 'தான்' என்ற ஓரே சொல்தான்:—

கொள்ளத்தக்கதுதான் அது
கொள்ளத்தான் தக்கது அது
கொள்ளத்தக்கது அதுதான்

'தான்' என்ற ஒரு சொல் ஓரே தொடரில் பல வேறு இடங்களில் பொருந்துவதால் நுட்பமான கருத்து வகைகளைக் காட்டவல்லதாகின்றது. 'தான்' என்ற சொல் அது சேரும் இடத்துக்கேற்ற மதிப்பைப் பெறுகிறது. இடமதிப்புக்குரிய ஆற்றலையும் செல்வாக்கையும் பெறுகிறது.

ஒரு நாய் காரிலேறிப் போகிறது. ஜமீன்தார் அதைக் கொஞ்சுகிறார். அவரைப் பார்க்க வருகின்றவர்கள் ஜமீன்தாருக்குத் தரும் மதிப்பை நாய்க்கும் தருகிறார்கள். தெருவில் ஒரு நாய் நொண்டி நொண்டி ஓடுகிறது. பையன்களின் கல்லெறி தாங்காமல் அலறுகிறது. சிறுவர்களுக்கு அந்த அலறல் இன்னிசையாக இருக்கிறது.

ஜமீன்தார் நாய் அவ்வளவு செல்வாக்குடன் இருப்பதற்கும், அதே பிறவி தெருவிலே கிடந்து துன்பப்படுவதற்கும் காரணம் என்ன? இடமதிப்புத்தானே!

மதிப்புரை

மதிப்புரைக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

அல்லாமா இக்பால்:—எழுதி வெளியிட்டோர்: திரு. ர. பா. மூ. கனி, எர்ரபாலு செட்டி தெரு, ஜி.டி. சென்னை. விலை ரூ. 1-10 பஞ்சாபில் பிறந்து உலகப் புகழ் பெற்ற இக்பாலின் வாழ்க்கைக் குறிப்பாகிய இந்நூல் நல்ல நடையில் எழுதப் பெற்றுள்ளது. நடு நடுவே கவிஞரின் பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பழமை விரும்பும் தமிழ்ப் பண்டிதர்கள் முதலில் பாரதியை வெறுத்து, பின்னர் ஏற்றுக்கொண்டது போலவே, உருது இலக்கியத் துறையிலும் நிகழ்ந்தது என்பதற்கு இக்பாலின் வாழ்க்கை சான்று பகரும். நூலின் முதற்பகுதியை விட இரண்டாம் பகுதி இனிமையாக அமைந்திருக்கிறது.

மௌலானா ஜௌஹர் மலர்:—வெளியிட்டோர்: இஸ்லாமிய கலைக் கழகம், 59, பிராட்வே, சென்னை. விலை 8 அணா. தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுப் பெருந் தியாகிகளாய் வாழ்ந்த முகமதலி, ஷௌகதலி ஆகிய சகோதரர்கள் இந்திய வரலாற்றில் இடம் பெறுவார்கள். அவருள் முகமத் அலியைப் பற்றிய நினைவு மலர் இது. ஏதாவதொரு வகையில் மௌலானா முகமதலியோடு தொடர்பு கொண்டவர்கள் இதில் எழுதியிருக்கிறார்கள். பயனுள்ள நல்ல நூல்.

மறுமலர்ச்சிக் கவிதைகள் ;—ஆசிரியர்: "புதுவைச் சிவம்" வெளியிட்டோர்: ஞாயிறு நூற்பதிப்பகம், அம்பலத்தாடு ஐயர் மடத்துத் தெரு, புதுச்சேரி. விலை 12 அணா. தமிழ்நாட்டில் கவிதைகள் பெருகி வருகின்றன. நல்ல முயற்சிகள் சில; வெற்றி பெறுவன சில. அவற்றுள் இவ்வாசிரியரின் முயற்சியும் ஒன்று. இவர் கூறும் கருத்துக்கள் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளத் தக்கனவல்ல என்றாலும் தமிழர் இன உணர்ச்சி பெறவேண்டுமென்ற உண்மை ஆர்வம் இருக்கிறது.

தமிழர் தன்மதிப்புப் பாடல்கள் :—ஆசிரியர்: "புதுவைச் சிவம்" வெளியிட்டோர்: ஞாயிறு நூற்பதிப்பகம், அம்பலத்தாடு ஐயர் மடத்துத் தெரு, புதுச்சேரி. விலை 8 அணா. இதுவும் மேலுள்ள மதிப்புரைக்கு உரியது. 'திராவிடம்' என்று வலியுறுத்திப் பேசுதல் இன்றைய நிலையில் பொருந்துவதாகாது.

புதையுண்ட நாகரிகம்:—ஆசிரியர்; 'சித்தன்', வெளியிட்டோர்: மின்னல் பதிப்பகம், 29, புஸ்ஸி வீதி, புதுச்சேரி, விலை 6 அணா. புதுச்சேரிக்கு அருகில் புதைபட்டுக் கிடக்கும் அரிக்கமேட்டைப் பற்றி எழுதியுள்ள சின்னஞ்சிறிய ஆராய்ச்சிக் கட்டுரை.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்:—ஆசிரியர்: நஜீர், வெளியிட்டோர்: மின்னல் பதிப்பகம், புதுவை. விலை 5 அணா. இது வாழ்க்கை வரலாறு கூறுவது. எளிய நடை.

பொன்னி:—(மாதப் பத்திரிகை) ஆசிரியர்: முருகு-சுப்பிரமணியன். வெளியிட்டோர்: செந்தமிழ்ப் பதிப்பகம், புதுக்கோட்டை. விலை 8 அணா. கண்ணுக்கினிய முறையில் தெளிவுற அச்சிட்டுள்ள இப்பத்திரிகை தமிழ்நாட்டுக்கு நல்ல தொண்டு புரியும் என்று எதிர் பார்க்கிறோம். 'தனித்தமிழ்' என்ற தலைப்பில் எவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அழகிய தமிழ் நடையில் திரு. பெரியசாமி எழுதியுள்ள கட்டுரை குறிப்பிடத்தக்கது. கதை, கவிதை, கட்டுரைகள் உள்ளன, அண்ணாத்துரை, அப்பாத்துரை, தேசிகன், பாரதிதாசன் முதலியோர் எழுதியுள்ளனர்.

தமிழ்ச் சுடர்:—(மாதம் ஒரு புத்தகம்) பதிப்பாசிரியர்: மீ. சு. இளமுருகனார். பெரியகுளம், மதுரை. விலை 6 அணா. திரு மு. வரதராசன் அவர்களின் அழகிய கட்டுரையை முதலில் தாங்கி, 'சுடர்' ஒளிர்கிறது. நல்ல தமிழ்ப் பயிற்சி வாய்ந்த பதிப்பாசிரியரின் தொண்டு வெற்றிபெற வேண்டுமென்பது நம் விருப்பம்.

யோகாசனம்:—எழுதியவர்: வி. என். குமாரசாமி, 216 திருவொற்றியூர் ஐரோடு, தண்டையார்பேட்டை, விலை அணா-12. இந்நூலாசிரியர் யோகாசனப் பயிற்சியில் மிக்க திறமைசாலி. அவர் மனைவி திருமதி சீதாலட்சுமி குமாரசாமியும் அப்படியே. இவர்கள் யோகாசனத்தின் மூலம் தாங்கள் பெற்ற இன்பத்தை உலகோர் பெற வேண்டுமென்றே இந்நூலை வெளியிட்டுள்ளனர். பயிற்சி முறை, அதைக் காட்டும் படங்கள் ஆகியவை நூலில் இருப்பதால் ஒவ்வொருவரும் தாங்களே எளிதில் கற்றுக் கடைப்பிடிக்க முடியும். என்றாலும் ஆசிரியருடன் நேரிலோ கடித மூலமோ தொடர்பு கொள்வது நல்லது.

வ. உ. சி. படம்:—வெளியிட்டோர்: வ. உ. சி. படிப்பகம், திருமலைராயன் பட்டினம். விலை அணா 5. சிறிய அளவிலுள்ள இப்படத்தின் விற்பனையில் வரும் இலாபம் மேற்படி படிப்பகத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுவதால் தமிழர் ஆதரவு அவசியம்.

வெளியிட்டோர்: மா. பொ. சிவஞானம், 1-29, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. அச்சிட்டோர்: திரு. கே. சி. நாகலிங்க முதலியார், செங்குந்த மித்திரன் அச்சகம், சென்னை-1. **ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்.**

தமிழ் முரசு

(மாதம் இருமுறை)

உள்நாடு

ஆண்டுச் சந்தா	ரூ. 6—0—0
6 மாதச் சந்தா	ரூ. 3—0—0
தனி இதழ்	ரூ. 0—4—0

வெளிநாடு

ஆண்டுச் சந்தா	ரூ. 7—0—0
6 மாதச் சந்தா	ரூ. 4—0—0
தனி இதழ்	ரூ. 0—5—0

●

விளம்பர விகிதம்

(ஓர் இதழில் வெளியிட)

அட்டை (வெளிப்புறம்)	ரூ. 100.
அட்டை (உட்புறம்)	ரூ. 75.
புத்தகத்துள் ஒரு பக்கம்	ரூ. 50.
புத்தகத்துள் அரைப்பக்கம்	ரூ. 25.

●

தமிழ் முரசுப் பதிப்பகம்
திருவல்லிக்கேணி : : சென்னை

சக்தி காரியாலயம் — சென்னை-14

அரசியல் நூல்கள்

		ரு.	அ.
நான் மந்திரியானால்	காந்திஜி	1	0
சுயராஜ்யம் வேண்டாமா?	,,	1	0
இந்திய சுயராஜ்யம்	,,	1	0
அணுகுண்டும் அஹிம்ஸையும்	,,	1	4
உலக நிலை	ராஜாஜி	2	0
கிராம இயக்கம்	ஜே. ஸி. குமரப்பா	3	0
அறிஞர் மார்க்ஸ்	ஆர். ராமனுதன்	1	8
வியட்நாம் குடியரசு	,,	0	6
ரத்தக் களரி	நேதாஜி	1	8
விஜயலக்ஷ்மியின் வெற்றி	ரா. ஹாலாஸ்யநாதன்	0	8
இந்திய சமஸ்தானங்கள்	கே. அருணாசலம்	4	8
இந்தோனேஷியா	,,	0	12

பொருளாதாரம், மற்றவை

செல்வம்	க. சந்தானம்	1	8
பொய்யும் மெய்யும்	,,	1	8
காய்கறித் தோட்டம்	மு. அருணாசலம்	5	0
உணவுப் பஞ்சம்	,,	1	8

தபால் செலவு தனி

சக்தி காரியாலயம் — சென்னை-14

Wrapper Printed by Shakti Press Ltd., Madras-14.